Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 10 செவ்வாய்க்கிழமை (26.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 329

## பொலிஸ் அதிகாரம் கோரக்கூடாது



(சென்னை)

தமிழர்கள் தாங்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதை மறந்து தம்மை இலங்கையர்களாகக் கருதி அந்த நாட்டின் அரசமைப்பு, சட்டங்களுக்கு கட்டுப்பட வேண்டும், வடக்கு மாகாணத்துக்கு தனியாக பொலிஸ் அதிகாரத்தைக் கோரக்கூடாது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் காணாமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவில் இடம்பெற்றுள்ள இந்திய மனித உரிமை பணியாளர் அவ்டாஸ் கௌஷல். இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு, இந்தியா, (19) பக்கம் பார்க்க...

## சாத்தியமில்லை பொலிஸ் அதிகாரம்



(கொழும்பு)

வடக்கு, கிழக்கிற்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங் கப்படமாட்டாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபை கோருவதனைப் போன்று காணி அதிகாரங்கள் வழங்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதன் மூலம் மீண்டும் ஆயுதப் போராட்டமொன்று வெடிக்க வழியமைக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பசறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்ட (19) பக்கம் பார்க்க...

# மேற்குலக சவால்களை சமாளிக்க அரசுக்கு பாகிஸ்தான் உதவும்

(கொழும்பு)

மேற்குலகிடமிருந்து இலங்கை அரசு எதிர்நோக்கி வரும் சவால்களைச் சமாளிக்கக்கூடிய வகையில் அனைத்து வகையான உதவிகளையும் வழங்குவதற்கு பாகிஸ்தான் அரசு தயாராக இருப்பதாக அந்த நாட்டின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் மொகமட் அயூப் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளினால் அநாவசியமாக பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிக்க பாகிஸ்தான் இலங்கைக்கு பூரண ஆதரவினை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இப்போது சரியான பாதையில் பயணம் செய்வதாகவும், யுத்தத்துக்குப் பின்னர் சிறந்த முறையில் நல்லிணக்க முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரி (19) பக்கம் பார்க்க...

## தலைநகரில் மிதக்கும் சந்தை

ஆசியாவின் ஆச்சரியம் நோக்கிய அபிவிருத்தி செயற்றிட்டமாக கொழும்பு புறக்கோட்டை பஸ்ரியன் மாவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மிதக்கும் வர்த்தக சந்தை திறந்து வைக்கப்பட்டது.

புறக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு அண்மையாக நிர்மாணிக்கப்பட்ட இந்த வர்த்தக சந்தை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ஷ



வரவேற்றார். தொடர்ந்து வர்த்தக (19) பக்கம் பார்க்க...

## சாட்சிகளைப் பாதுகாக்க விரைவில் புதிய சட்டம்

முல்லை.நீதிபதி தகவல்

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமூலம் மிகவிரைவில் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் இதன்மூலம் சிறுவர்களின் உரிமைகள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரின் பெருமுயற்சியினால் இச்சட்டமூலம் விரைவில் அமு (19) பக்கம் பார்க்க...

## அனந்திக்கு எதிராக முல்லையில் ஆர்ப்பாட்டம்


(முல்லைத்தீவு)

யுத்த காலத்தில் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமற் போனவர்கள் பலரின் உறவினர்கள் இணைந்து வட மாகாணசபையின் உறுப்பினர் அனந்தி சசிதரனிற்கு எதிராக மீண்டும் முல்லைத்தீவில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

அனந்தி சசிதரன் உள்ளிட்ட தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரணைகள் நேற்று இடம்பெறவிருந்தது. இதற்கு அவர்கள் செல்வார்கள் என்ற எதிர்பார்ப்பில் அப்பகுதியில் கூடியிருந்த பலரால் இவ் ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

எனினும் நேற்றைய விசாரணை திகதி குறித்து ஒத்தி வைக்கப்படுமென்ற தகவலின் அடிப்படையில் அனந்தியோ ஏனைய காணாமற் போனவர்களது உறவுகளோ முல்லைத்தீவிற்கு சென்றிருக்கவில்லை.

எனினும் அவர்கள் நீதிமன்றினுள் இருப்பதாக கருதியே அங்கு கூடியிருந்தவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாகத் தெரியவருகின்றது.




வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாபபான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர்.
(விசேடமாக A/L பரீட்சை எழுதியவர்கள் இணைந்துகொள்ளலாம். (0775964299) (C/3775)

# விசேட நிதி ஒதுக்கீடுகள் இல்லையேல் துரித மேம்பாட்டுக்கு வாய்ப்பில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவிப்பு



ஒவ்வொரு திட்டங்களுக்குப் பின்னாலும் கோடிக்கணக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இவை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களுக்கு விசேட அடிப்படையிலேயே கிடைக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று அக்காராயன் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள கமநலசேவை நிலையத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இன்று அக்கராயன்பிரதேச விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமான நாள் கடந்த கால யுத்தத்தால் அழிந்துபோன இப்பகுதி விவசாயத்தின் முதன்மைத்தளமாகிய கமநலசேவை நிலையத்திற்கு பதிலீடாக புதிதாக ஒரு நிலையத்தினை அமைப்பதற்கான வேலைத்திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக சுமார் ஒன்பது மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு திட்டங்களுக்குப் பின்னாலும் கோடிக்கணக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இவை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களுக்கு விசேட அடிப்படையிலேயே கிடைக்கிறன.

தென்னிலங்யையில் கூட அநேகமான பகுதிகளில் இன்றுவரை கமநல சேவைத் நிலையங்கள் இல்லை. ஆனால், எமது பகுதிகளில் தேவையான அனைத்துப் பகுதிகளிலும் கமநல சேவை நிலையங்களை அமைக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இவை அனைத்தும் விசேட நிதி ஒதுக்கீடுகள் மூலமே கிடைக்கின்றன.

இவ்வருடம் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக குடிநீர் விநியோகத்திற்கு மட்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் பல மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. இந்த நிதியுதவிகளைக் கொண்டு வருவதற்காக நாம் மிகக்கடுமையான உழைப்பை செலுத்தியிருக்கின்றோம்.

ஆனால் சிலர் அரசாங்கம் என்றால் செய்யத்தான் வேண்டும் என்று மேடைகளில் சாதாரணமாக குறிப்பிடுகின்றார்கள்.

அக்கராயன் பிரதேசத்தின் நலன் கருதி இப்பிரதேசத்தை தனி பிரதேச செயலகமாக மாற்றுவதற்கு முயற்சிகளை எடுத்திருக்கிறோம். ஆனால், சிலரின் சொந்த நலன்களின் சிந்தனையால் அது கைகூட முடியாத நிலை காணப்படுகிறது. ஆனால், அந்த முயற்சியை நாம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தயாரூபனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண கமநலசேவைகள் அபிவிருத்தி உதவி ஆணையாளர் பற்றிக்டிறஞ்சன், பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி, கிராம சேவையாளர்களான சபாரத்தினம் மற்றும் துஸ்யந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் தலைவர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கமநலசேவைகள் மற்றும் விசேட கருத்திட்ட அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவிடம் முன்வைத்த தொடர் கோரிக்கையின் விளைவாக அக்கராயனில் கமநல சேவை நிலையத்தினை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற நிலையில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமரால் அதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

# சாட்டிக் கடற்கரையில் கஞ்சாவுடன் 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். சாட்டிக் கடற்கரையில் கஞ்சா வைத்திருந்ததாகக் கூறப்படும் கொழும்பைச் சேர்ந்த 6 பேரை நேற்று முன்தினம் மாலை கைதுசெய்ததாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

24, 37 வயதுடைய இருவரும் 27, 28 வயதுடைய 4 பேரும் கைதுசெய்யப்பட்டதுடன், இவர்களிடமிருந்து 25 கிராம் கஞ்சாவை கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர். யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்த இவர்கள், மதுபானம் அருந்திவிட்டு கடற்கரையில் நின்று தங்களுக்குள் சண்டையிட்டுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு சென்ற பொலிஸார், இவர்களின் வாகனத்தைச் சோதனையிட்டபோது வாகனத்துக்குள் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாலங்கள் அமைப்பு

முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலிநகர் - பாண்டியன்குளம் வீதியிலுள்ள இரண்டு சிறிய பாலங்கள் பி.எஸ.டி.ஜி (PSDG) நிதியத்தின் 4 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்டு வருவதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

மேற்படி வீதியானது நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாந்தை கிழக்குப் பிரதேச சபை ஆகியவற்றின் உரிமையின் கீழ் உள்ளது.

அந்தவகையில், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் வரும் மேற்படி இரண்டு சிறிய பாலங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கான நிர்மாணப் பணிகள் இம்மாதம் முதல் வாரத்தில் இருந்து ஆரம்பமாகியுள்ளன.

மழை காலத்தைக் கருத்திற்கு கொண்டு இதன் நிர்மாணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

***றீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)


# சந்நிதியானுக்கு இன்று இரண்டாம் திருவிழா



எந்நிதியும் தரும் சந்நிதி வேலா எமக்கோர் நீதி தர
என்னுமேன்ன தாமதமோ
மயிலேறும் மன்னவனே வள்ளி மணவளனே குமரா
தொண்டைமானாற்றருகாக தோளேறும் காவடிகள்
தேடிவந்து ஆடுதையா

கணேசமூர்த்தி விசிந்தன்

# தேர் முட்டியில் வைத்து மது அருந்தியவர்கள் கைது

கரணவாய் பகுதியிலுள்ள ஆலயமொன்றின் தேர் முட்டிக்கு மேல் வைத்து மதுபானம் அருந்திய மூவரை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த 26, 27 மற்றும் 30 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து நல்லூர் தேர் உற்சவத்திற்காக யாழ்ப்பாணம் வந்த இவர்கள், மேற்படி பகுதியிலுள்ள ஆலயமொன்றின் தேர் முட்டியில் வைத்து மதுபானம் அருந்தியுள்ளனர்.

இதனை அவதானித்த ஆலயப் பரிபாலன சபையினர் இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு தெரிவித்துள்ளனர். அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார், அவர்கள் மூவரையும் கைது செய்துள்ளனர். (116)

# டெங்கு நோய் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

## சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்தில் அண்மை நாட்களாக பெய்துவரும் மழையையடுத்து டெங்கு நோய் மீண்டும் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று மட்டும் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு இலக்காகிய நால்வர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த சுகாதாரப் பகுதியினர் இந்த மாதம் நேற்றுவரை இவ்வாறு 52 பேர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்ப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மேலும் இந்த வருடம் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களின் தொகை 429 பேரைத் தாண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கோப்பாய், நல்லூர் மற்றும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தே அண்மை நாட்களில் டெங்குத் தொற்றுக்கள் ஏற்பட்டுள்ளன.

கோப்பாயில் இருவரும், நல்லூரில் இருவரும் மற்றும் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து இதுவரை 6 பேர் கடந்த மூன்று நாட்களில் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)



வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தனது தீர்த்த உற்சவம் நேற்று இடம்பெற்ற போது... (48,25)

# தீவுப்பகுதிக்கு பௌசரில் குடிநீர் யாழ்.மாநகர சபை அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதி மக்களின் குடி நீரப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் யாழ்.மாநகர சபை வேலணை, ஊர்காவற்றுறை பகுதிகளுக்கு பௌசர் மூலம் குடிதண்ணீர் வழங்கி வருகின்றது.

பருவகால மழை பொய்த்துப் போனதால் யாழ்.மாவட்டத்தின் தீவுப் பகுதியில் உள்ள மக்கள் குடிநீரின்றி அவதிப்படுகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்ய அவர்களுக்குத் தேவையான குடி நீரை வழங்கும் நோக்குடன் யாழ்.மாநகர சபை வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் ஆகியவற்றிற்கு பௌசர்கள் மூலம் வழங்கி வருகின்றனர்.

மேலும் நீர் விநியோகம் தொடர்பில் முதல்வர் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் நீர் விநியோகம் மேற்கொண்டு வரும் நாம் மக்களது நன்மை கருதி தீவகப் பகுதிக்கும் மேலதிக சேவையினை செய்து வருகின்றோம். அவர்களுக்கு போதியளவான நீர் கிடைக்கும் வரை தொடர்ந்தும் நாம் எமது சேவையினை மேற்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் மாநகரசபை நீரை வழங்குவதுடன் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினால் தீவகத்தில் குடி நீர்தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு பௌசர் மூலம் குடிநீர் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (48)

# படையினர் அன்னதானம் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு நேற்றுமுன்தினம் தேர் திருவிழாவின் போதும் நேற்று தீர்த்தத் திருவிழாவின் போதும் யாழ்.பாதுகாப்பு படைத்தலைமையகத்தினால் அன்னதானம் வழங்கும் நிகழ்வு ஆலயமுன்றலில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆலயத்தின் நான்கு பிரதான வீதிகளூடாகவும் தானசாலைகள் அமைத்து பக்தர்களுக்கு யாழ்.பாதுகாப்பு அதிகாரிகளினால் பொதி செய்யப்பட்ட அன்னதானம் வழங்கி வைக்கப்பட்டது. இவ் அன்ன தான சாலை தொடர்ந்து இரண்டு நாட்கள் இடம்பெற்றன.

# சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பு கடன் வழங்கல்




யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றத்தின் இளைஞர் நுண் கடன் உதவித்திட்டத்தின் ஊடாக 12 சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கடன் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வுகள் யாழ்.இராசாவின் தோட்டத்தில் உள்ள வர்த்தக தொழில் துறை மன்றத்தில் நடைபெற்றது. இதன்போது சுய தொழிலை மேற்கொள்ளும் பயனாளிகள் 12 பேருக்கு 7 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த கடன் வழங்குதல் தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வர்த்தக தொழில் துறை மன்றம் யாழ்ப்பாண மாவட்டத்தினை சேர்ந்த குறுகிய அளவிலான சுயதொழில் முயற்சியில் ஈடுபடுகின்ற இளைஞர், யுவதிகளை ஊக்குவிக்கும் முகமாக கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற இலகுகடன் திட்டமே மேற்படி இளைஞர் நுண்கடன் உதவித் திட்டமாகும்.

நிலைத்து நிற்கக்கூடியதான புதிய தொழில் முயற்சி அல்லது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட தொழில்முயற்சியினை விரிவுபடுத்துவதற்கு ஊக்கமளிக்கும் நோக்குடன் இந்த இலகு கடன்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே மன்றத்தினால் வழங்கப் படும் கடன் மீளவும் திருப்பி செலுத்தப்படும் இடத்து மேலும் பலருக்கு குறித்த கடனை வழங்க முடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (48)

# அடிமடியில் கவனமாக இருக்க வேண்டாமா...?






போரினாலும் அரசியற் பிரச்சினைகளாலும் மிக நீண்டகாலமாக பல இழப்புகளையும் பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் சந்தித்த மக்கள் மாகாணசபையின் மூலமாக ஒரு மாற்றமும் தீர்வும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர்.

ஆனால், மாகாணசபையை எடுத்துவைத்துக்கொண்டு நடத்துகின்ற அரசியற் கூத்துகளையும் பத்திரிகைச் செய்திகளையும் பார்த்து, 'என்னதான் நடந்து கொண்டிருக்கிறது? இதெல்லாம் தொடர்கதைதானா?' என்று விரக்தியிலுள்ளனர் மக்கள்.

தேர்தல்களின்போது வெளிப்படும் வேகமும் வாக்குறுதிகளும், தேர்தல் முடிந்தவுடன் எங்கோ போய்விடுகின்றன! ஒன்றையும் செய்யமுடியாமல், எதுவும் நடத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தால் மக்களுக்கு ஏமாற்றம் மட்டுமல்ல கோபமும் வந்தே தீரும்.

'மக்களுடைய கோபம் என்ன செய்யும்? அவர்கள் அதையெல்லாம் கொஞ்சக் காலத்தில் மறந்து விடுவார்கள்' என்று இந்தத் தலைவர்கள் கருதக் கூடும்.

என்றபடியால்தானே மக்களின் விருப்பங்கள் எதிர்பார்ப்புகள் எதுவும் தீராமல் ஆவேசக் கூத்துகள் மட்டுமே இங்கு அரங்கேறுகின்றன!

மாகாணசபையின் முன்னே ஏராளம் பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. மக்களின் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் அதிகமாக இருக்கின்ற அளவுக்கு பொறுப்புகளின் கனதியும் கடமைகளின் அவசியமும் உண்டு.

ஆனால், மக்களிடமிருந்து அந்தப் பொறுப்பை ஏற்றவர்கள், தேர்தல் முடிந்த கனத்திலிருந்து தங்களுக்குள் குழிபறிக்கவும் குத்துவெட்டுப்படவும் ஆரம்பித்துவிடுகிறார்கள்.

இந்த லட்சணத்தில், எப்படி மலைபோலிருக்கும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும்? மக்கள் மனங்களிலிருக்கும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய இயலும்?

முதலில் நல்லிணக்கம் உருவாக்கப்பட வேணும். இதை சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகிறது. நல்லிணக்கம் என்பது உடன்பாடு காண வேண்டிய—தீர்வு காணவேண்டிய விசயங்களைப் பேசுவதற்கும் பேசும் விடயங்களை பரஸ்பரம் புரிந்து கொண்டு தீர்வை எட்டுவதற்குமான அடித்தளம்.

ஆனால், இலங்கையில் நல்லெண்ண நடவடிக்கைகள் என்பது இன்னும் நம்பிக்கையளிக்கக் கூடிய அடையாளங்களை உருவாக்கவில்லை.

அரசாங்கத் தரப்பில் இதை ஒரு ஏற்பாடாக வைத்துக்கொண்டு அங்கங்கே செயற்களங்களை உருவாக்க ஏதோ செய்யப்படுகிறது. பேச்சளவிலாவது இந்த நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், ஏனைய எந்தத் தரப்பிலும் நல்லெண்ண முயற்சிகள் புள்ளியளவிற்கூட ஆரம்பிக்கப்படவில்லை. அவர்களுடைய சிந்தனையிலேயே அத்தகைய ஒரு விசயம் இருப்பதாக உணரப்படவில்லை.

எல்லோரும் அரசாங்கத்தின்மீது குற்றங்களையும் பொறுப்புகளையும் பாரப்படுத்தி விட்டு தங்கள் தவறுகளையும் தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் மறந்து விடுகிறார்கள். அல்லது அவற்றைத் திட்டமிட்டு மறைத்துப் புறக்கணிக்கிறார்கள்.

இலங்கையில் காயங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உட்படாமல் யாருமே தப்பவில்லை. எல்லாச் சமூகங்களும் காயமடைந்திருக்கின்றன.

ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் ஏதோ ஒரு நிலையில் மிகக் கீழ்த்தரமாக நடத்தியிருக்கிறது. மிக மோசமான வன்முறையின் மூலம் சிதைத்திருக்கிறது.

ஆகவே, எல்லோருமே குற்றவாளிகள்தான். அல்லது குற்றங்களின் பங்காளிகளாகவே இருந்திருக்கிறோம்.

இதையெல்லாம் உணர்ந்து, இந்தத் தவறுகளால் ஏற்பட்ட இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்றால் நிச்சயமாக நல்லிணக்கம் அவசியமே.

அப்படிப் பார்த்தால் எல்லா இடங்களிலும் நல்லிணக்கம் அவசியமாக உள்ளது.

பால் ரீதியாக, இன ரீதியாக, பிரதேச ரீதியாக, மத ரீதியாக, சமூக ரீதியாக எனப் பல தளங்களில்.

இந்தத் தளங்களில் எல்லாம் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு யார் தயார்?

ஒரு நண்பர் சொல்கிறார், 'அங்க இங்க எண்டு மற்றவையிட்ட நல்லிணக்கத்தைப் பற்றிக் கதைக்கிறீங்கள். முதல்ல தமிழ்மக்கள் தங்கள் ஒற்றுமையைக் காட்ட தெரிவுசெய்து விட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே நல்லிணக்கம் தேவைப்படுது. அவையள்தான் தேர்தலின்போதும் வெளிநாட்டுப் பயணங்களின்போதும் தவிர மற்றபடி ஆளாளுக்கு அடிபட்டுக் கொண்டும் பிடுங்குப்பட்டுக் கொண்டுமிருக்கினம். மாகாணசபைக்கு வாக்குப் போட்ட ஆட்கள் எல்லாம் செருப்பைத் தூக்கிற கோவத்தில இருக்கினம்' என்று.

மற்றவர்களின் மடியைப் பார்க்க முதல் எங்களின் மடியைப் பார்த்துக் கவனமாக வைத்திருக்க வேணும் என்று தெரியாமலா சொன்னார்கள்.

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி - - ஸ்ரீ அன்னை

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## "புதுச் சூத்து"க்குத் தயாராயிருத்தல்!

புதுடெல்லி சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு நரேந்திர மோடியின் அரசு அதிர்ச்சி வைத்தியம் அளித்துத் திருப்பி அனுப்பியிருக்கிறது.

"நமது பிரச்சினைகளை விரிவாக எடுத்துரைத்தோம்; இந்திய அரசு மிக உன்னிப்பாகக் கேட்டது..." என்று இங்குவந்து கதைவிட ஏலாத அளவுக்கு, அவர்கள் பட்டவர்த்தனமாக உடைத்துப் பேசி விட்டார்கள்.

"இலங்கையிலுள்ள அனைத்துத் தரப்பினரும் இணைந்து 13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் உங்களுக்கான அரசியல் தீர்வைப் போய்க் காணுங்கள்" என தன்னைச் சந்தித்த கூட்டமைப்புக் குழுவிடம் மோடி தெரிவித்ததாக, பிரதமரின் அலுவலகத்தினரே ஒளிக்க மறைக்க ஒன்றுமில்லாதவாறு செய்தியை வெளியிட்டு விட்டார்கள்.

அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து பேசுங்கள் என்பது வேறொன்றுமல்ல, தெரிவுக்குழுவுக்குப் போங்கள் என்ற கறாரான அறிவுறுத்தல்தான். நாம் முன்னரே எழுதியிருந்தபடி, நம் சீமான்கள் உலக்கையை விழுங்கியது போல் திக்குமுக்காடிப் போனார்கள் என்பது அவர்கள் நேரே இலங்கைக்குத் திரும்பாததிலிருந்து தெரிகிறது.

தமிழ்நாட்டுக்குப் போய், அங்கே யாராவது உணர்ச்சிகரமாகச் சவால் விடக் கூடியவர்களை சந்தித்து, அவர்களை "பஞ்ச்" வசனங்கள் எதையாவது உரக்கச் சொல்லவைத்து, நமது மக்களுக்கு கொஞ்சம் வீர முறுக்கேற்றிவிட்டு...

அதே உசாரோடு, "இந்தியப் பயணம் நாம் எதிர்பார்த்தபடியே தமிழ் மக்களுக்கு வெற்றிகரமாக முடிந்தது" என்று மக்கள் காதில பூ வைக்க வழியுண்டா என்று தேடும் கடைசி முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலும், இவர்களைப் போலவே "இலங்கை யுத்தத்துக்கு உதவிய காங்கிரஸ் அரசை வீழ்த்திவிட்டு மோடி அரசைக் கொண்டுவருவதன் மூலம் இலங்கைத் தமிழர்களுக்குத் தன்னாட்சி பெற்றுவிடும் காலம் கனிகிறது" என்று முழங்கி...

இப்போது தங்களது நவதுவாரங்களையும் பொத்தியபடி சுருண்டு கிடக்கும் எவரையேனும் எழுப்பி ஒருபாட்டம் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்துவிட்டு வேண்டுமானால் வரலாமே தவிர, "அடுத்தது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்ற மக்களது கேள்வியிலிருந்து தப்ப சிங்கன்களுக்கு ஒரு வழியுமில்லை.

இந்தியா அறுத்துறுத்து இதைச் சொன்னபிறகு, ஜெனீவாவில் வருசாவருசம் பிரேரணைகளை நிறைவேற்றிக் கொண்டிருப்பதில் ஆகப்போவது என்ன என்பதை இவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டுமல்லவா? "எல்லாத்தையும் இனி அமெரிக்கா பார்த்துக் கொள்ளும்" என்று பொத்தாம் பொதுவாகக் கதைவிட்டிட்டுப் போக முடியுமா?

அல்லது,

"13வது திருத்தத்திலிருந்து பேசும்படி இந்தியா சொல்வதை ஏற்கமுடியாது; இலங்கைத் தமிழர்களுக்குத் தனிநாடு எடுத்துத் தரும்வரை போர்க்குற்றப் படங்களை ரிலீஸ் செய்துகொண்டே இருப்போம்" என்று சனல்–4 க்காரர்களைச் சொல்லவைக்க முடியுமா?... அதில் என்ன பிரயோசனம்?

அல்லது,

"இனிய தமிழ்மக்களே! இந்தியா நம் முதுகில் குத்திவிட்டது; அதை இனி நம்ப முடியாது; அடுத்த ஜெனீவாப் பிரேரணையில் காத்திரமான திருத்தங்களைச் செய்ய வரும்படி எங்களை அமெரிக்கா அன்போடு அழைத்திருக்கிறது; நமது மக்களுக்கு விரைவில் நல்ல செய்தி வரும்" என்ற குடுகுடுப்பைக்கு மக்கள் மயங்குவார்களா?

எந்தப் புதிய சூத்துமாத்தைத் தயாரித்துக்கொண்டு, நம் தங்கத் தலைவர்கள் இங்குவந்து இறங்கப் போகிறார்கள் என்பதை யோசிக்க யோசிக்க நமக்குப் பெருங் கவலையாகத்தானிருக்கிறது. அவர்களது "புதுச் சூத்து" என்ன என்றறிய குறுகுறுப்பாகவும் இருக்கிறது.

- ஆசிரியர்.

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை;

# 29 இல் அடுத்தகட்ட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் இடையே நடந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்த நிலையில், வரும் 29 ஆம் திகதி டில்லியில் இருநாட்டு அதிகாரிகள் நிலையில் மீனவர் தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

கடந்த மே 12 ஆம் திகதி கொழும்பில் நடந்த பேச்சுவார்த்தையில், தமிழக விசைப் படகு மீனவர்கள் தடை செய்யப்பட்ட வாருதல் (trawling) மீன்பிடி மற்றும் இரட்டைமடி மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி, இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதை முற்றிலுமாக கைவிட வேண்டும் என இலங்கை மீனவப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

ஆனால் இந்த மீன்பிடி முறையை மாற்றிக்கொள்ள 3 ஆண்டு அவகாசம் வேண்டும் எனவும், இலங்கை கடற் பரப்பில் ஆண்டுக்கு 120 நாட்களுக்கு மீன்பிடிப்பதற்கு பதிலாக 90 நாட்களாக குறைத்துக் கொள்கிறோம் எனவும் தமிழக மீனவர்கள் கோரிக்கை வைத்தனர். ஆனால், இதை ஏற்க இலங்கை பிரதிநிதிகள் மறுத்து விட்டனர். மேலும், தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை அழித்து வருவதாக அவர்கள் குற்றம் சாட்டினர்.

இந்நிலையில், இலங்கை கடற்றொழில் அமைச்சக செய்தி தொடர்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'இந்தியா, இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்த, இரு நாட்டு மீன்பிடி பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி தீர்மானமொன்று பெறுவதற்கு முன்னதாக, இருநாட்டு அதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தையை நடத்த தீர்மானித்துள்ளோம். இந்தப் பேச்சுவார்த்தை டில்லியில் ஆகஸ்ட் 29 ஆம் திகதி நடைபெறும். இதில் இந்தியா - இலங்கை அதிகாரிகள் கலந்துகொள்வர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர், இலங்கையில் இருந்து தமிழக மீனவர்களின் 62 விசைப்படகுகளும் விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கைக்குள் வர நைஜீரியர்களுக்கு தடை

(கொழும்பு)

நைஜீரிய பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எபோலா வைரஸ் தாக்கம் காரணமாக இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

குடும்பத்துடன் தாம் இலங்கைக்கு சென்றிருந்ததாகவும் இல்ங்கை அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை எனவும் நைஜீரியாவைச் சேர்ந்த அகின்குனி அட்செய்யீ என்பவர் அந்நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தம்மை ஏனைய பயணிகளிடமிருந்து பேறுபடுத்தி வைத்திருந்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எபோலா வைரஸ் தீவிரமாக பரவி வருவதாகவும் இதனால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கூட்டணியை உருவாக்க முயற்சிக்கும் ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க் கட்சி கூட்டணியொன்றை உருவாக்குவதற்கான புதிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், இது தொடர்பாக அக்கட்சி எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது உட்பட முக்கியமான விடயங்கள் குறித்து ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் சிவில் அமைப்புகளுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்து கட்சி சிந்தித்துவருவதாகவும் தெரியவந்துள்ளது.

சிறுபான்மை சமூகத்தின் கட்சிகள் மற்றும் மத அமைப்புகளுடனும் கட்சி இது குறித்து பேச்சுக்களில் ஈடுபடவுள்ளது.

கட்சி தனது யோசனைகளை சில சிவில் அமைப்புகளிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு, இதில் முக்கியமாக இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

# 2015 இற்குள் 18 வாவிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## நீரியல் வள அமைச்சு தகவல்

நாட்டிலுள்ள 18 நீர்நிலைகளை அபிவிருத்தி செய்ய கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து அமைச்சு மேற்கொள்ளும் இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 18 நீர்நிலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்கொழும்பு, ரக்வான, கொக்கல, ஊரணி மற்றும் நராதுவ, கொக்கிளாய், மடுவ, தாளன், லங்காபதுன, மட்டக்களப்பு, சூழன்தாளை, நாகாறு, சிலாபம், சாலை மற்றும் நந்திக்கடல் ஏரிகள் இந்த ஆண்டு அபிவிருத்தி செய்யப்படும்.

நீர்நிலைப் பகுதிகளில் உள்ள சட்டவிரோத குடியிருப்புக்கள் அகற்றப்பட்டு சூழலுக்கு தீங்கு ஏற்படாத வகையில் நீர்நிலைகள் அபிவிருத்தி செய்யப்படும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்ன தலைமையில் நீர்கொழும்பு கடலேரியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன, நீர்கொழும்பு வாவியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபை உயர் அதிகாரிகளுடனும் மீன்பிடி அமைச்சு இணைந்த பிற நிறுவனங்களின் அதிகாரிகளுடனும் அண்மையில் கலந்துரையாடினார்.

# அரச பணியாளர்களுக்கு அதிசொகுசு பேருந்துசேவை

வெளியூர்களில் இருந்து தினமும் கொழும்புக்கு வந்துசெல்லும் அலுவலகப் பணியாளர்கள் நன்மை கருதி 2000 புதிய அதிசொகுசு பஸ்களை சேவையில் ஈடுபடுத்த இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

கொழும்பு நகர எல்லைக்குள் தினமும் நுழையும் தனியார் வாகனங்கள் காரணமாக ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களுக்கு ஒரு தீர்வாக கொழும்பு நகரில் முக்கிய ஆறு முக்கிய பாதைகளில் இந்த 2,000 புதிய அதிசொகுசு பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். போக்குவரத்து நெரிசல் அதிகமாகக் காணப்படும் மொரட்டுவ - புறக்கோட்டை, கெஸ்பேவ - புறக்கோட்டை, நீர்கொழும்பு - புறக்கோட்டை, கம்பஹா - புறக்கோட்டை, கடுவெல - புறக்கோட்டை மாலபே மற்றும் ஹோமாகம வழியாக புறக்கோட்டை ஆகிய வீதிகளிலே இந்த அதிசொகுசு பஸ் சேவை நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

விசேட தேவையுடையோருக்கு இந்த அதி சொகுசு பஸ்களில் தொலைபேசி வசதிகள் உட்பட நல்ல வசதிகள் வழங்கப்படும் எனவும் ஒரு பஸ்ஸில் 100 பயணிகள் வசதியாக பயணம் செய்யமுடியும் எனவும் அமைச்சர் கூறினார்.

# வாழைக்குலைகள் விலை அதிகரிப்பு

## மகிழ்ச்சி தெரிவிக்கும் விவசாயிகள்



(சுன்னாகம்)


வாழைக்குலைகளின் விலை கடந்த சில நாட்களாக அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வாழைப் பழம் ஒருகிலோ 70 ரூபாமுதல் 90 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதுடன் கதலி வாழைப்பழம் 50 ரூபா முதல் 60, 70 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வாறு வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பினால் வாழை பயிர்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளதுடன் தினமும் தமது வாழை உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்து வருவதைக் கர்ணக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த விவசாயிகள் வாழைச்செய்கையினை அதிகரிக்க கூடிய முயற்சிகளை எடுத்து வருவதாகவும் அதிகளவான பணத்தை வாழைச் செய்கையில் முதலீடு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (66)

# கந்தையா சுவாமிகள் திருவுருவச்சிலை திறப்பு



ஈழத்து சித்தர்கள் வரிசையில் அவதரித்த கோண்டாவில் குமரகோட்டத்தைச் சேர்ந்த தவத்திரு கந்தையா சுவாமிகளின் (குடைச்சாமி) திருவுருவச்சிலை கோண்டாவில் குமரகோட்டம் ஞானவைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. திருவுருவச் சிலையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச சபைத்தலைவர் ப.வசந்தகுமார், ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ வசந்தராஜசர்மா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (48,63)

# கைக்குண்டு மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநெச்சி, புலோப்பளை மேற்குப் பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றின் கிணற்றுக்குள் இருந்து எம் 75 கைக்குண் டொன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு மீட்கப்பட்டதாக பளை பொலிஸார் தெரிவித்தனர்.

உரிமையாளர் கிணற்றை துப்புரவு செய்வதற்காக கிணற்றை பார்த்த போது கிணற்றுக்குள் கைக்குண்டு இருப்பதனைக் கண்டுள்ளார் இவர் இது பற்றி பளை பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததையடுத்து இராணுவத்தினருடன் சென்ற பொலிஸார் மேற்படி கைக்குண்டை தாம் மீட்டதாக தெரிவித்துள்ளனர். (18)

# கரவெட்டி வாசிக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

கரவெட்டி பகுதியைச் சேர்ந்த செல்வராசா செல்லம்மா என்பவரை தடியால் அடித்துக் காயப்படுத்திய நபரை எதிர் வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நிதவான் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த கோவிந்தசாமி ஜெகதீஸ்வரன் என்பவர் கரவெட்டியையச் சேர்ந்த செல்வராசா செல்லம்மா என்பவரை தடியால் அடித்து காயப்படுத்திய குற்றச்சாட்டில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (18)

# லாவண்யாவின் 'தெய்வீக சுகானுபவம்'

## பரதநாட்டிய பயிற்சிப்பட்டறை



(யாழ்ப்பாணம்)

இந்திய நடனமாமணி லாவண்யா அனந்தவின் 'தெய்வீக சுகானுபவம்' பரதநாட்டிய பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் ஞாயிற றுக்கிழமை யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், இந்திய துணைத்தூதரகமும், இந்திய இலங்கை அறக்கட்டளை மையமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இப்பயிற்சிப் பட்டறையில், இலங்கைக்கான .இந்திய பதில் துணைத்தூதுவர் எஸ்.டி.மூர்த்தி பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார்.

இப்பயிற்சிப் பட்டறையில், யாழ்.பல்கலைக்கழக நடன விரிவுரையாளர்கள், நடன மாணவிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு, நடன நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டதுடன், நடனமாமணியிடம் நடனத்தில் ஏற்படும் சந்தேகங்களையும் கேட்டு அறிந்து கொண்டனர்.

அத்துடன், நடனமாமணி தில்லானா போன்ற நடனங்களையும் ஆடிக்காண்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. (பா, 25)

# அன்பளிப்புக்கு பற்றுச்சீட்டு பெறுமாறு ஆலய நிர்வாக சபை அறிவிப்பு

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யவிரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுச் செல்லுமாறு ஆலய நிர்வாக சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பணம், பவுண், மற்றும் அன்னதானப் பொருட்கள், பூசைப்பொருட்களை அன்பளிப்புச் செய்வோர் நிதி அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டுக்களைப் பெறறுக்கொள்ள வேண்டும் எனவும், கோவில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் அன்பளிப்பு பெற அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அளித்தல், அங்கப்பிரதிட்சை யாவும் வெளி வீதியில் நடாத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் ஆலய வழிபாடுகளுக்கு வரும் பக்தர்கள் நகைகள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரவு நேரங்களில் கோவில் வீதியில் தங்குவதோ பொழுது போக்குவதோ தவிர்க்கப்பட வேண்டும் எனவும் ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது. (66)

# நெல்லியடி பேருந்துநிலையத்தை திருத்தி அமைக்க கோரிக்கை

(நெல்லியடி)

நெல்லியடி பேருந்து நிலையத்தை திருத்தித்தருமாறு பயணிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை புனர்நிர்மாணம் செய்து தரப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வறட்சியான காலங்களில் மர நிழல்களுக்குக் கீழ் பேருந்துக்கு காத்துநின்று பயணங்களை மேற்கொண்ட மக்கள் தற்போது பெய்துவரும் மழையால் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்த மழை காலங்களில் தமது பயணங்களை மேற்கொள்ளும் மக்களுக்கு நோய்கள் ஏற்படும் அபாயசூழ்நிலை காணப்படுவதாகவும் இதனால் பெரும் இன்னல்களை எதிர் நோக்குவதாகவும் பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே பயணிகளின் நன்மை கருதி பேருந்து நிலையத்தை திருத்தித் தருமாறு உரிய தரப்பினரிடம் நெல்லியடி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)



தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பின் கீழ் கர்ப்பிணித்தாய்மார்களுக்கான மாதாந்த உதவித்திட்டம் நேற்று தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வுபெற்ற நீதியரசர் மு.திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவதையும் கர்ப்பிணித்தாய் ஒருவருக்கு உதவித்தொகை வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம்.

# அதிகார பகிர்வு விடயத்தில் எவரும் அரசை மீறி செயற்பட முடியாது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை சர்வதேச அளவில் கொண்டு செல்கின்றமையே இன்று அரசாங்கத்திற்கு இருக்கும் பெரிய சவாலாகும்.

எனினும் அதிகாரப் பகிர்வு விடயத்தில் அரசாங்கத்தை மீறி யாரும் செயற்பட முடியாது என தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சர் பட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். பயங்கரவாத செயற்பாடுகளுக்கு துணை போன தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இந்தியா இணங்குவது அதிர்ச்சியளிக்கின்றது என தெரிவிக்கும் அமைச்சர் அதிகாரப் பகிர்வு விடயத்தில் அரசாங்கத்தை மீறி எவரும் செயற்பட முடியாது. இந்தியாவிற்கும் இது பொருந்தும் எனவும் குறிப்பிட்டார்.

13 இற்கு மேலாக சென்று தீர்வுகாண இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவோம் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் அரசாங்க தரப்பினரிடம் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயக ரீதியிலான ஆட்சி முறைமை யொன்று இலங்கையில் நடைபெறுகின்ற நிலையில் மூவின மக்களுக்குமான தீர்வு நோக்கி பயணிக்க பல வழிகள் இருககின்ற நிலையில் இலங்கை விடயங்களை சர்வதேச மயப்படுத்தும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கின்றமை கண்டிக்கத்தக்கதொரு விடயமாகும். சம்பந்தன் விகனேஸ்வரன் ஆகியோர் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறி சர்வதேச அமைப்புக்களையும் இயக்கங்களையும பிரதிநிதித்துவபபடுத்துகின்றனர். இவர்களின் கருத்துக்களையும் கோரிககைகளையும் முக்கியப்படுத்தி இந்தியா செயற்படுவது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனித்து இயங்கும் ஒரு சாராரை மட்டும் ஆதரிக்கும் பிரிவினைவாத கட்சி இவர்கள் அரசாங்கத்துடன் இணங்கி செயற்பட ஒருபோதும் விரும்பவில்லை.

அதேபோல் அவர்கள் கேட்கும் மாகாண அதிகாரங்கள் தமிழ் மக்களுக்காகவல்ல மீண்டுமொரு தீய சக்தியினை வடக்கில் உருவாக்கவே என்பதை இந்தியா முதலில் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஆரம்பத்தில் இந்தியா தவறிழைத்தமையினாலும் விடுதலைப் புலிகளை ஆதரித்தமையினாலுமே இலங்கை முப்பது வருட கால யுத்தத்திற்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அதே தவறினை மீண்டும் ஒருமுறை விடுவது இரு நாடுகளுக்குமே பாதிப்பினை ஏற்படுத்தும்.

மேலும், இலங்கையின் அதிகாரப் பகிர்வு விடயத்திலோ அல்லது இலங்கைக்குள் விசாரணை நடாத்துவதையோ தீர்வு நோக்கி. பயணிப்பதையோ அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

# 2015 சுதந்திரதினம் மகிந்தாவின் ஊரில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சொந்த ஊரில் 2015 ஆம் வருட தேசிய சுதந்திர் தின நிகழ்வுகளை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி அம்பாந்தோட்டை, வீரகெட்டிய என்னும் இடத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் நடாத்தப்பட உள்ளன. வீரகெட்டியவில் சுதந்திர தின நிகழ்வுகளை நடாத்த அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்காக பிரதமர் டி.எம். ஜயரட்ன தலைமையிலான 12 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர்களான பந்துல குணவர்தன, ஜோன செனவிரட்ன, கெஹலிய ரம்புக்வெல்ல, டி.பி. ஏக்கநாயக்க மற்றும் மகிந்த அமரவீர உள்ளிட்டவர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

30000 பேரின் பங்களிப்புடன் சுதந்திரதின நிகழ்வுகளை நடாத்த ஜனாதிபதி உத்தேசித்துள்ளார்.

# வேதன முரண்பாட்டைத் தீர்க்க புதிய முறை தயாரிப்பு

அனைத்து அரச சேவைகளுக்கும் பொருந்தும் வகையில் புதிய வேதன முறையொன்றை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு வேதன முரண்பாட்டு தீர்வுக்கான ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் ஜயலத் ரவி திசாநாயக்க இந்தத்தகவலை வெளியிட்டார். புதிய வேதன முறையை தயாரிப்பது தொடர்பில் தற்போது கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2006 - 6 வேதன சரத்துக்கு அமையவே அரச சேவைகளுக்கான வேதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போதுளள வேதன முறைமை காரணமாகவே, சில அரச நிறுவனங்களில் வேதன முரண்பாடு ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

# அதிக விலையில் அரிசி விற்பனை சட்டத்தின் முன் 400 வர்த்தகர்கள்

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்த 400 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமாக விலையில் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை கண்டறியும் பொருட்டு, அண்மை யில் சுமார் 1,500 வர்த்தக நிலையங்கள் சோதனைக்குட் படுத்தப்பட்டதாக நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எம்.டக்ளஸ் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலைக்கு மேல் அதிகமாக அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை கண்டறியும் வகையில், தொடர்ச்சியாக தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி நள்ளிரவு முதல் அரிசிக்கு அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கல்லு நீக்கப்பட்ட ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 77 ரூபாவாகவும், வெள்ளை நாட்டரசி 68 ரூபாவாகவும், சிவப்பு நாட்டரசி மற்



றும் வெள்ளை அரிசி ஒரு கிலோ கிராம் 66 ரூபாவாகவும், சிவப்பரிசி ஒரு கிலோ கிராம் 60 ரூபாவாகவும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது. இந்த கட்டுப்பாட்டு விலையைவிட கூடிய விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றம் சாட்டுகின்றனர்.

கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் 0771 088 922 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடுகளை பதிவு செய்யுமாறு நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ.எம்.டக்ளஸ் குறிப்பிட்டார்.

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படும்

## பாகிஸ்தான் அறிவிப்பு

இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

நெருக்கடியான தருணங்களில் இலங்கைக்கு பாகிஸ்தான் பக்க பலமாக செயற்பட்டுள்ளதாக இலங்கைக்கான முன்னாள் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மொஹமட் அயுப் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுதங்களை சமாளிக்க பாகிஸ்தான் இலங்கைக்கு பூரண ஆதரவினை வழங்கும்.

மேலும் இலங்கை சரியான பாதையில் பயணம் செய்வதாகவும், சிறந்த முறையில் நல்லிணக்க முனைப்புக்கள் முன்னெடுக்கப்படடு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் உள்விவகாரப் பிரச்சினைகளில் வேறு தரப்பினர் தலையீடு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்குலக நாடுகளின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க மனித உரிமை விவகாரங்களை இந்த தரப்பினர் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் இலங்கை பேணி வரும் உறவுகள் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அரசு நிவாரணம் வழங்கவேண்டும்

## கூறுகிறார் அனுரகுமார திஸநாயக்க

பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கியுள்ள மக்களின் நலன் கருதி அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

உருளைக்கிழங்கின் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த அவர் இந்திய உருளைக்கிழங்கு வகைகள் பாரியளவில் இறக்குமதி செய்யப்படுவதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கம் விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்கி வருவதனா விலை குறைவாக காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். பால் மாவிற்கான விலையை விடவும் பால் மாவிற்கான வரிகள் அதிகம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பால் மா குடித்தோம் என தெரிவிப்பதனை விடவும் வரி ஒரு கோப்பை குடித்தோம் என்று சொல்வதே சரியானதாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் நாட்டை ஆட்சி செய்யும் விதம் குறித்து திருப்தி கொள்ளமுடியாது என அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு மக்க ளையும் நாட்டையும் பாரிய பொருளாதார நெருக்கடியில் ஆழ்ததும் ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முக்கிய பதவிகளில் மாற்றம் ஐ.தே.க. தீர்மானம்



ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றத்தைக் கொண்டுவர கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

தற்போதைய நிலையில் அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை எதிர்க்கட்சியினால் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியின் முக்கிய கட்சியான ஐ.தே.க.வுக்குள் காணப்படும் உட்கட்சி முரண்பாடுகளும் குத்துவெட்டுகளும் அதற்கு முக்கிய காரணமாக கருதப்படுகின்றன.

இதற்கிடையே நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தி ஓரளவுக்கு வெளிக்காட்டப்பட்டிருந்தது, எனினும் எதிர்க்கட்சிக்கும் குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் கிட்டவில்லை.

இவற்றைக் கருத்திற் கொண்டு கட்சியின் உட்கட்சி முரண்பாடுகளைக் களைந்து, மறுசீரமைப்பொன்றை மேற்கொள்ள ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாச நியமிக்கப்படவுள்ளதுடன், சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த சிலரும் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையை வென்று, எதிர்க்கட்சியின் சிறுபான்மை கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவது ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால நோக்கமாக இருப்பதாக ஸ்ரீகொத்தா வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

# வைத்தியர் நியமிக்கப்படவில்லை சிரமப்படும் உருத்திரபுரம் மக்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட உருத்திரபுரம் கிராம வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரமாக வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் முன்னர் கடமையாற்றிய வைத்தியர் சுகயீனம் காரணமாக ஒரு வாரமாக கடமையில் இல்லையெனவும் இந் நிலையில் மாற்று வைத்தியர் ஒருவர் இதுவரை நியமிக்கப்பட வில்லை எனவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் உருத்திரபுரம், கோணாவில் ஊற்றுப்புலம் காந்தி கிராமம், உருத்திரபுரம் கிராமத்தை உள்ளடங்கிய சுமார் 800 இற்கும அதிகமான குடும்பங்கள் இவ் வைத்தியசாலையை பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில் இக் கிராமங்களை உள்ளடக்கிய ஒரு வைத்தியசாலை இதுவாகும். இந் நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள மழை காரணமாகவும் முன்னதாக ஏற்பட்டிருந்த வறட்சி நிலையினாலும் மக்கள் பல நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறு நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருகை தரும் நிலையில் வைத்தியர் இன்மையால் ஏமாற்றத்துடன் செல்லும் நிலை தினமும் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியும் பார்வையிட்டுச் சென்றுள்ள நிலையில் குறித்த மக்களின் வைத்திய தேவையை கருத்தில் கொண்டு வைத்தியர் ஒருவரை நியமிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## வருடாந்த மஹோற்சவம்

(ஆனைக்கோட்டை)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்தும் 10 தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் எதிர்வரும் 1 ஆம் திகதி தண்டிகை உற்சவமும் 2 ஆம் திகதி வெள்ளிவிரத உற்சவமும், 3 ஆம் திகதி சங்காபிஷேகமும், 4 ஆம் திகதி வியாழக்கிழமை சந்தன கோபாலன் உற்சவமும், 5 ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் மாம்பழத் திருவிழாவும், மாலை கைலாச வாகன காட்சியும் இடம்பெறும்.

6 ஆம் திகதி பெரிய சப்பறத்திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் 8 ஆம் திகதி காலை 9 மணியளவில் தீர்த்த உற்சவமும் மறுநாள் பூங்காவனத்திருவிழாவும் இடம் பெறும். (104)

## முரசின் இன்றைய பலன்

(26.08.2014 செவ்வாய்க்கிழமை)



ஜய வருஷம் ஆவணி மாதம் 10 ஆம் திகதி.
பிரதமை / சித்தம்.
மக நட்சத்திரம் காலை. 07.12 வரை. பின் பூரம்.
இராகு காலம் 03.05 - 04.35 வரை. சுபநேரம் 10.35 - 12.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மாணவர்கள் பெற்றோர்களுக்கு நன்மதிப்பும் பெருமையும் சேரத்தக்க விதத்தில் நடக்கத்தலைப்படுவர், வெளிநாட்டிலிருந்தும் நெருங்கிய உறவினர்கள் வருகை தருவதினால் இன்பச்சூழ்நிலை தக்க வைக்கும். |
| ரிஷபம் | கழிவு ஒயில் சுத்தமான கிணற்று நீரில் கலந்துள்ளமை சம்பந்தமாக வழக்குத்தாக்கல் செய்யமுடிவு, இதுவரை தொழிலில் நிலவிக்காணப்பட்ட மந்தநிலை புதிய யுக்தியினால் களைகட்டுதல். |
| மிதுனம் | போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து நுழைவு விசாவிற்கு விண்ணப்பம் செய்தமை கண்டுபிடிக்கப்படல், விற்பனையாகாது இழுபட்ட சொத்து எதிர்பாராத விதமாக நல்ல விலைக்கு போதல். |
| கடகம் | போலியான கடனட்டை மூலம் பொருட்களைப் பெற்ற நிலையில் கைதாகல், குடும்பத்தில் பல நாட்களாக குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்த உறவுகள் விலகிச்செல்லல். |
| சிம்மம் | தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனடைதல், புதிய ஒப்பந்தம் தேடி வந்தவேளை கைவிட்டுவிடாது பற்றிப் பிடியுங்கள். |
| கன்னி | தவறிய அழைப்பால் இடம்பெற்ற வார்த்தைகளை எண்ணி அருவருப்படைதல், அரசியல் வாதிகள் செய்த நன்மைகளை நன்றிப்பெருக்குடன் பாராட்ட முற் படுதல். |
| துலாம் | தங்கமுலாம் பூசப்பட்ட ஆபரணத்தை வங்கியில் அடைவு வைக்க முயன்றவர் கைதாதல், நெருக்கடியான நேரத்தில் நண்பர் செய்த உதவியினால் இழப்பிலிருந்தும் தப்பிவிடுதல். |
| விருச்சிகம் | சிறு தானியப்பயிர்கள் கட்டாக்காலி மிருகங்களினால் சேதமாக்கப்படுவதினால் கவலை கொள்ளல், அரசுத் துறைப்பணியாளர்களுக்கு சக ஊழியரின் ஒத்துழைப்பினால் வேலைபளு நீங்கிவிடல். |
| தனுசு | தொலைக்காட்சி ஊடகத்தினுள் மூழ்கிக்கிடக்கும் பிள்ளையை வெளிக்கொணர பெற்றோர் அரும்பாடுபடல், சாமர்த்தியமான பேச்சினால் கவர்ந்து காரியத்தை நிறைவேற்றி விடுதல். |
| மகரம் | பாடசாலைக்குச் செல்லும் வயதுடையவரை வேலைக்கு அமர்த்தியவருக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளல், நீண்ட காலத்தின் பின்னர் வெளியூரிலிருந்து வந்த பிள்ளை மீண்டும் பயணமாவதைக்கண்டு துயரில் மூழ்குதல். |
| கும்பம் | விவாக வாழ்க்கை மதுபோதைக்கணவரினால் சலித்துப்போனதால் மணவிலக்குப்பெற எண்ணுதல், தொல்லை கொடுத்தவர் எச்சரிக்கை செய்யப்பட்டதால் அடாவடித்தனம் அற்றுப்போய்விடல். |
| மீனம் | மகனின் கைபேசியில் ஆபாசப்படங்கள் இருந்ததைக் கண்டு பிடித்த பிதாவுடன் முறுகல் நிலைஏற்படல், தரம் குறைந்த முகப்பூச்சு கிறீம் வகைகள் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் என பாவனையாளர்கள் அதிகார சபையினை அறிவுறுத்தல். |

## வீட்டுத்திட்டம்

(வரணி)

வரணி ஜே/341 கிராம அலுவலர் பிரிவு மக்களின் வீட்டு வசதியை பூர்த்தி செய்யும் முகமாக இந்திய வீட்டுத்திட்டத்திற்கு 96 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பெயர் விபரம் பொதுமக்களின் பார்வைக்கு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

அதனுடன் ஒவ்வொரு குடும்ப புள்ளிவிபரத் தகவல்களும் சேர்த்து இணைக்கப்பட்டுள்ளன. (150)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மட்டுவில் மருதங்குளம் ஆதி வைரவப் பெருமான் திருக்கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

நாளை கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகின்றன. காலை 9 மணிக்கு கர்மாரம்பம் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று வரும் சனிக்கிழமை காலை 8 மணி முதல் மால்லை 4.30 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறுவதுடன் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.20 மணி முதல் 8.15 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

'தேசமான்ய' சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேக தலைமைக்குருவாக இருந்து மஹா கும்பாபிஷேகத்தை நடாத்திவைக்கவுள்ளார்.(இ)


## கொடுப்பனவு

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் ஊனமுற்றோர்க்கான மாதாந்தக் கொடுப்பனவான மூவாயிரம் ரூபா ஆவணி மாதத்துக்குரியது தற்போது வங்கிகளில் வழங்கப்படுகிறது.

பயனாளிகள் அந்தந்த வங்கிகளில் கணக்குப்புத்தகத்தை சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இக் கொடுப்பனவு சமூகசேவைப் பிரிவினூடாக ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (150)

## நல்லைக் கந்தனுக்கு இன்று பூங்காவனத்திருவிழா



### பூங்காவனம் காணுவோம்!

பூங்கா வனத்தன்று பூசிப்போம் நல்லூரில்
ஆங்கழகுக் காய்வளரும் பூமரங்கள் - தீங்கான
சூழலை மாசகற்றுஞ் சூக்குமமாம் மக்களுயிர்
வாழ வகுத்த வழி.

-நல்லூர் கந்தன் பாமாலை-

### வழிகாட்டு முருகா!

வீடுகள் தோறும் முருகா என்றொலிக்கிறது ஆனால்
வில்லங்கங்களை நாமே உற்பத்தி செய்கின்றோம்,
காடுகளில் மிருகங்கள் ஒற்றுமை யாகின்றனவே
கௌரவமாக வாழ எம்மால் முடியவில்லையே.

-கே.எஸ்.சிவஞானராஜா-

### மணமாலை தா முருகா!

ஞானமும் நீ ஞானத்தின் பொருளும் நீ
ஆன தோர் வெஞ்சமரால் சூரரும்
ஞானம் கூடி திருப்பெருவடிவும் கண்டாரே
வானமும் மண்ணும் வணங்கும் வேலே
நல்லூருக்கு இறையே நாவலனை தந்தவா!
விண் நிறைந்த ஞானபேரொளியும் நீயே
திருமறைக்காடான பூங்காவனம் கண்டு
திருமண மாலைதருவாய் வள்ளிமணாளா!

-மண்டைதீவு மகிழ்நன்-

### ஆறுமுகப் பெருமானே அருளீய வருவாய்!

கற்பூரச் சட்டியுடன் காரிகையர் ஒருபால்
காவடிகள் ஆடிவரும் ஆடவர்கள் ஒருபால்
பொற்பதமே போற்றிசெயும் பூசுரர்கள் ஒருபால்
பொங்கியெழும் பக்தியினால் ஆர்த்தெழுவோர் ஒருபால
நற்பதமே தந்திடுவாய் நல்லைநகர்க் கந்தா
நால்வேதப் பொருளான ஈசனுமை மைந்தா
அற்புதங்கள் நிறைந்தொளிரும் அலங்காரத் கந்தா
ஆறுமுகப் பெருமானே அருளீய வருவாய்!

-கவிஞன் நயினை இராகுலன்-

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

பூங்காவனத்திருவிழாவான இன்று 'குறியும், நெறியும்' என்னும் விடயம் பற்றி சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து காரைநகர் கிழவன்காடு அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள், சிறுப்பிட்டி ஊர் சத்தியதாஸ் குழுவினர் வழங்கும் வள்ளி திருமணம் நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

♦♦♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் பூங்காவனத் திருவிழாவான இன்று வினையறுக்கும் வேலாயுதா நடன அளிக்கை இடம்பெறவுள்ளது. (42)

# களத்திற்கு வெளியில்...

டெண்டுல்கருடன் ஹோலியையும், ராவிட்டுடன் புஜாராவையும் ஒப்பிடுவது கேள்வியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் அளவுக்கு இவர்களால் டெஸ்டில் சாதிக்க இயலுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இளம் வீரர்களான இந்த இருவரது ஆட்டம் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. செய்தத் தவறையே மீண்டும் மீண்டும் செய்தனர்.

**பொய்கொட் (இங்கிலாந்து முன்னாள் வீரர்)**

டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்வியிலிருந்து இந்திய வீரர்கள் பாடம் கற்று இருப்பார்கள். ஒரு நாள் தொடரில் புதிய ஆற்றலுடன் வீரர்கள் ஆடுவார்கள். ஒருநாள் போட்டிக்கான பிரேத்தியோக துடுப்பாட்ட வீரர்கள் அணியில் உள்ளனர். கூட்டு அனுபவம் நிறைந்த வீரர்கள் இருக்கிறார்கள். இதனால் 5 போட்டிகொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி சிறப்பாக விளையாடும் என்று நம்புகிறேன்.

**ராவிட் (இந்திய அணி முன்னாள் கப்டன்)**


பிளட்சரின் பயிற்சியின் கீழ் தான் இந்திய அணி உலக கிண்ணத் தொடரில் பங்கேற்கும். இன்னும் அவர் தான் தலைவராக (பயிற்சிக்கு) இருக்கிறார். ரவிசாஸ்திரி எல்லா விடயங்களையும் மேற்பார்வையிடுவார். ஆனால் பிளட்சர் தான் தலைமை பயிற்சியாளர். அவரது அதிகாரம் குறைக்கப்பட்டதாக கூறப்படுவதில் உண்மையில்லை. வெளியிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அணிக்குள் அவர் முன்பு போல் தான் தொடருகிறார். இப்போது சில உதவியாளர்கள் வந்திருக்கிறார்கள். மற்றபடி ஒட்டுமொத்த வழிநடத்தும் விதத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.

**டோனி (இந்திய அணிக் கப்டன்)**

வெளிநாட்டில் இந்திய அணியின் மோசமான செயற்பாடு தொடர்கிறது. இதற்கு டோனி தான் பொறுப்பு. அவர் தொடர் குற்றவாளி ஆவார். இந்திய அணியின் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு தொடர்ந்து மோசமாக இருந்து வருகிறது. டோனி சரண்டர் ஆகிவிட்டார். அவரது கப்டன் ஷிப் மிகவும் மந்தமாக இருக்கிறது. அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்திலும் இந்திய அணியின் மோசமான நிலை தொடரும். டோனியின் கப்டன் ஷிப் தான் மோசமாக இருக்கிறது என்று பார்த்தால் அவரது விக்கெட் காப்புப் பணியும் அதைவிட மோசமாக உள்ளது. பிடிகளை பிடிப்பதில் அவர் அதிக ஆர்வம் காட்டவில்லை. மேலும் அவருக்கும், முதல் சிலிப் பீல்டருக்கும் இடையே யார் பிடி எடுப்பது என்பதில் குழப்பம் காணப்படுகிறது. டெஸ்ட் வீரர்களை தேர்வு செய்வதில் டோனி மிகப்பெரிய தவறு செய்துவிட்டார். ஜடேஜாவை அணியின் முன்னணி சுழற்பந்து வீரராக தேர்வு செய்ததை ஏற்றுக்கொள்ள முடியாது. பின்னி விடயத்திலும் அவர் சரியான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

**இயன் சப்பல் (அவுஸ்ரேலியா முன்னாள் வீரர்)**

# உசைன் போல்ட் புதிய சாதனை



உலகின் அதிவேக ஓட்ட வீரரான உசைன் போல்ட் மூடிய அரங்கில் வேகமாக ஓடி புதிய உலக சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

நபிபியா வீரர் பிராங்கி பிரெட்ரிக்ஸ் 1996ஆம் ஆண்டு 10.05 செக்கன்களில் 100 மீற்றர் தூரத்தை ஓடி நிலை நாட்டிய சாதனையை உசைன் போல்ட் 9.58 செக்கன்களில் ஓடி முறியடித்துள்ளார்.

போலாந்தில் உள்ள வார்ஸ்வவ் தேசிய கால்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற ஓட்டப் பந்தயத்திலே இந்த சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

உபாதைகளில் இருந்த மீண்ட பின்னர் உசைன் போல்ட் பங்குபற்றிய இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். இனி தனக்கு உபாதை வராது என நம்புவதாகவும், உபாதை காரணமாக தான் பட்ட கஷ்டங்கள் போதும் எனவும் உசைன் போல்ட் வெற்றியின் பின் தெரிவித்துள்ளார்.

சாதனை என்பது எவரோ ஒருவரால் நிச்சயம் முறியடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவர் இன்னும் இனங்காணப்படவில்லை. நிச்சயம் என்னைப் போலவோ அல்லது என்னை விட சாதிகக்கூடிய ஒரு வீரர் பிறந்துள்ளார் என்பதில் சந்தேகமில்லை எனவும் உசைன் போல் மேலும் தெரிவித்துள்ளார்.



# செக்குடியரசு வீராங்கனை சம்பியன்

(நியூ ஹெவன்)

அமெரிக்காவில் நடைபெற்ற கனெக்டிகட் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் பெத்ரா குவித்தோவா சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் மெக்டலீனா ரிபாரிகோவாவுடன் (ஸ்லோவகியா) நேற்று முன்தினம் மோதிய குவித்தோவா 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை கைப்பற்றினார். இந்த தொடரில் அவர் ஒரு செட்டை கூட இழக்காதது குறிப்பிடத்தக்கது. 2014 சீசனில் 2ஆவது சம்பியன் பட்டம் வென்றுள்ள குவித்தோவாவுக்கு, ரென்னிஸ் வாழ்க்கையில் இது 13ஆவது பட்டமாகும்.

# பந்து வீச்சில் சந்தேகம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சோஹாக் காஜி தவறான முறையில் பந்து வீசியுள்ளதாக அவர் மீது சந்தேகம் எழுந்துள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிராக கிரெனடா நகரில் 2ஆவது சர்வதேச ஒரு நாள் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியின்போது 23 வயது நிறைந்த சோஹாக்கின் பந்துவீச்சு சந்தேகம்படும்படியாக இருந்துள்ளது என ஐ.சி.சி. அறிக்கை தெரிவித்துள்ளது. போட்டியில் பங்களாதேஷ் அணி தோல்வியடைந்தது. இலங்கை அணியின் சசித்ரா சேனநாயக்க மற்றும் நியூசிலாந்து அணியின் கெய்ன் வில்லியம்ஸன் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டு எழுந்தது. அவர்கள் பந்து வீச்சு முறை குறித்து நடந்த பரிசோதனையின் முடிவில் தவறான முறையில் பந்து வீசியுள்ளனர் என்பது தெரிய வந்தது. இதனை தொடர்ந்து அவர்கள் இருவரும் பந்து வீசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் சயிட் அஜ்மல் மற்றும் சிம்பாப்வேயின் பிராஸ்பர் உத்சயா ஆகியோர் மீதும் இந்த மாத ஆரம்பத்தில் குற்றச்சாட்டு எழுந்தது. ஐ.சி.சி. விதிமுறைகளின்படி 21 நாட்களுக்குள் சோதனை நடாத்தப்படும். முடிவுகள் தெரியும் வரை சோஹாக் தொடர்ந்து பந்து வீசலாம். சுழற்பந்து வீச்சாளர்கள் இது போன்ற சர்ச்சைகளில் சிக்குவது தொடர்கதையாக உள்ளது. சோஹாக் ஐ.சி.சி.யின் சோதனைக்கு ஆளாகும் 5ஆவது சுழற்பந்து வீச்சாளர் ஆவார்.



# நீச்சலில் 5ஆவது தங்கம்



அமெரிக்காவின் கேட்டி லிடெக்கி பான் பசிபிக் நீச்சல் சம்பியன்ஷிப்பில் மீண்டும் உலக சாதனை படைத்தார்.

அவுஸ்ரேலியாவில் உள்ள கோல்ட் கோஸ்டில் பான் பசிபிக் நீச்சல் சம்பியன் ஷிப் நடைபெற்று வருகின்றது. இதன் பெண்கள் 1500 மீற்றர், பிரீஸ்டைல் பிரிவில் அமெரிக்காவின் கேட்டி லிடெக்கி பங்கேற்றார். இவர், 15 நிமிடம் 28.36 வினாடிகளில் இலக்கை அடைந்து உலக சாதனை படைத்தார். இதன் மூலம், கடந்த யூன் 19 இல் அமெரிக்காவில் நடைபெற்ற தொடரில் நிகழ்த்திய தனது முந்தைய சாதனையை (15:34.23) தகர்த்தார்.

நேற்று முன்தினம் இதே தொடரில் 400 மீற்றர், பிரீஸ்டைலில் உல்க சாதனை படைத்திருந்தார். தவிர, இதுவரை ஒட்டு மொத்தமாக பான் பசிபிக் சம்பியன்ஷிப்பில், (1500, 400, 200, 800, 4X200 மீ.,) ஐந்து தங்கப்பதக்கத்தை தன்வசப்படுத்தியுள்ளார். 17 வயதான இந்த பள்ளிச் சிறுமியின் செயற்பாடு நீச்சல் உலகத்தை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.





# இஸ்ரேல் தாக்குதல்; மெஸ்சி அனுதாபம்

இஸ்ரேலிய படையினரின் தாக்குதலுக்கு ஆர்ஜென்ரீனாவின் கால் பந்தாட்ட நட்சத்திரம் மெஸ்சி பேஸ்புக்கில் வருத்தத்தினை தெரிவித்துள்ளார்.


பலஸ்தீனம் மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் சிறுவர்கள் உயிரிழந்துள்ளமைக்கு இந்த வருத்தத்தினை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது பேஸ்புக்கில் ஒரு தந்தை என்ற வகையிலும் யூனிசெ.்.ப் நல்லெண்ண தூதுவர் என்ற வகையிலும் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன் மோதல்களில் எண்ணற்ற குழந்தைகள் உயிரிழக்கின்றமை தமக்கு வருத்தம் அளிக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

இந்த கருத்து தொடர்பில் இஸ்ரேலியர்கள் கடும் கண்டனத்தினை தெரிவித்துள்ளனர். மேலும் உயிரிழந்த மெஸ்சியின் ரசிகரான இஸ்ரேலிய சிறுவன் ஒருவனின் படத்தை வெளியிட்டு இதற்கு என்ன கூறுகின்றீர்கள் என கேள்வி கேட்டுள்ளனர். இதுவரையில் குறித்த மோதலில் 2,097 பலஸ்தீனியர்களும் 68 இஸ்ரேலியர்களும் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

சிறுவர்கள் கொல்லப்படுவதற்கு பல அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் தலைவருக்கு நிர்வாகத்தில் உயரிய பதவி



(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் உயரிய நிர்வாக பதவியை முன்னாள் தலைவர் நஜீம் சேதி பெற்றுக் கொண்டுள்ளார்.

தலைவரின் கீழ் இயங்கும் மூன்று முக்கிய பதவிகளில் ஒன்றான கிரிக்கெட் விவகாரங்களுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரியாக சேதி நியமிக்கப்பட்டுள்ளார். நிறைவேற்றுக் குழுவில் பிரதம நிர்வாக அதிகாரி, பிரதம நிதி அதிகாரி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று அதிகாரிகளுமே முடிவுகளை எடுக்கும் அதிகாரங்களைக் கொண்டவர்கள்.

இறுதி முடிவை தீர்மானிக்கும் அதிகாரம் தலைவருக்கே உண்டு. நஜீம் சேதி கடந்த காலங்களில் சர்ச்சைக்குரிய பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியில் மாறி மாறி இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கிரிக்கெட்டுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியம் என நஜீம் சேதி தெரிவித்துள்ளார்.

### அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட்

# காலிறுதியில் யாழ். மத்தி

(கண்டி)

அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடாத்தும் தேசிய மட்ட கிரிக்கெட் போட்டியின் காலிறுதி ஆட்டத்திற்கு யாழ். மத்திய கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான மூன்றாவது சுற்று ஆட்டம் கடந்த 17ஆம் திகதி கண்டி பொலிஸ் பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணியும் கண்டி நுகவெல கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கண்டி நுகவெல கல்லூரி அணி அலன்ராஜ், கௌதமன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கண்டி நுகவெல கல்லூரி அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமார 19, கருணாதிலக, திலகரட்ண ஆகியோர் தலா 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அலன்ராஜ் 10 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கௌதமன் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கார்த்தீபன் 15 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 98 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி ஜெறேசன், அலன்ராஜ் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றிபெற்றது.

இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 28 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெறேசன் 88 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 38, அலன்ராஜ் 43 பந்துகளை எதிர்கொண்டு ஒரு பவுண்டரிகள் அடங்கலாக 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் டினேஜன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நிசாநாயக்க ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். இப்போட்டியின் எட்டு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, பிரிவு இரண்டின் 17 வயது அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்திற்கு சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு பிரிவு இரண்டிற்கு முன்னேறிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி அபாரமான செயற்பாட்டின் மூலம் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி தனது திறமையை நிரூபித்துள்ளது. (எஸ்.பி.)



ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட அச்சுவேலி கலைமகள் அணிக்கு வடக்கு மாகாண உடற்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் கிண்ணம் வழங்குவதைக் காணலாம். யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93,48)

## விளையாட்டுச் செய்திகள்

### வடக்கு மாகாண கடற்கரை கரப்பந்து

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி சம்பியன்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய மாகாண அணிகளுக்கிடையிலான கடற்கரைக் கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அணிகள் கைப்பற்றிக்கொண்டன.

மாவட்ட அணிகளுக்கிடையில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடாத்திய கடற்கரைக் கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் வல்வெட்டித்துறை ரேவதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் பங்குகொண்டன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின. இதில் முதல் செட்டை 21-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் மன்னார் மாவட்ட அணி கைப்பற்றி முன்னிலை பெற்றது. இதன் பின்னர் எழுச்சி பெற்ற யாழ். மாவட்ட அணி அடுத்தடுத்து இரு செட்களையும் வென்று அசத்தியது. இறுதியில் யாழ். மாவட்ட அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதின. ஆரம்பம் முதலே அசத்திய கிளிநொச்சி மாவட்ட அணி புள்ளிகளைப் பெற்றவண்ணமிருந்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வவுனியா வீராங்கனைகள் செயற்பட்டபோதிலும் செட்களைக் கைப்பற்ற முடியவில்லை. இறுதியில் கிளிநொச்சி மாவட்ட அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. (93)

# அம்பாந்தோட்டையில் இன்று இரண்டாவது ஒரு நாள்

(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று முன்னிலை பெற்றுள்ளது. இப்போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெறும் பட்சத்தில் தொடரைக் கைப்பற்றிக் கொள்ளும். இந்நிலையில் இப்போட்டியில் வென்று கடந்த போட்டியில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுப்போம் என இலங்கை அணி கட்டன் மத்தியூஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# மத்தியஸ்தர் சங்க நிர்வாகத் தெரிவு



(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் நடுவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த 17ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்றன. இதில் 2014-2015 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக பா-முகுந்தன், செயலாளராக செ.சுபேந்திரா, பொருளாளராக வ.மனோறாஜ், உபதலைவராக மு.நவநேசன், உபசெயலாளராக ம.சதீஷ்கரன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ச.கருணாநந்தன், இ.மெய்யழகன், ரி.ரஜிகரன், ரி.லஷ்மன், பூ.கஜேந்திரன், க.ஜெயப்பிரதாபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)

# மாவட்ட தாச்சி போட்டி

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சி சங்கம் நடாத்தும் 18 ஆவது மாபெரும் தாச்சிப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெறவிருந்தன. கன மழை காரணமாக இப்போட்டி நடாத்த முடியாமல் கைவிடப்பட்டதாகவும் இப்போட்டிகள் நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிகள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி ஆகிய வங்கிகளின் அனுசரணையுடன் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

### முல்லை சென்.யூட் வி.க. மென்பந்து கிரிக்கெட்

# கிண்ணம் வென்றது முள்ளியவளை வளர்மதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட முள்ளியவளை வளர்மதி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 18இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த 21ஆம் திகதி பிற்பகல் முல்லைத்தீவு முத்தவெளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அணிக்கு 11 பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி 10 ஓவர்களைக் கொண்டதாக நடாத்தப்பட்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் முள்ளியவளை வளர்மதி அணியும் கள்ளப்பாடு உதயம் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வளர்மதி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கள்ளப்பாடு உதயம் அணி ஆரணியனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் விக்கெட்டுக்களை வேகமாக பறிகொடுத்தது. இறுதியில் கள்ளப்பாடு உதயம் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கீதன் 16 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஆரணியன் 3 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கப்டன் கவிராஜன் இரண்டு, வேணு தாஸ், சுஜிபவன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 57 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வளர்மதி அணி 8.2 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விஜயச்சந்திரன் 18, வேணுதாஸ் 09, ஆரணியன் 10, கவிராஜன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நவராஜ், ரவீந்திரன், அர்ஜுன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்ற முள்ளியவளை வளர்மதி அணி சென்.யூட் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை வளர்மதி அணியின் ஆரணியன், சிறந்த பந்து வீச்சாளராக வளர்மதி அணியின் கவிராஜன், தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரர் மற்றும் அதிக போட்டிகளில் பங்குகொண்டு சிறப்பாக ஆடிய நவராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.



# எல்.ரீ.ரீ.ஈ உடனான ராஜீவின் செயற்பாடுகள்

**1** – முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் கே.நட்வர்சிங் புத்தகத்திலிருந்து


**1986** நவம்பரில் சார்க் உச்சி மாநாடு பெங்களூரில் நடைபெற இருந்தது. ராஜீவ் காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆகியோர் அந்த மாநாட்டில் பங்குபெறுபவர்களில் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களாக இருந்தார்கள். மாநாடுகளில் பின்பற்றப்படும் எழுதப்படாத விதியான இருதரப்பு விடயங்கள் இதில் பின்பற்றப் படவில்லை.

ஆரம்ப நிகழ்ச்சியில் எல்லா நாடுகளின் தலைவர்களும் பேசியதி னால் சர்ச்சைகள் தவிர்க்கப் பட்டிருந்தன. ஜெயவர்த்தனாவின் பேச்சின் பிரதி ஒன்றை நாங்கள் ஒருவாறு பெற்றுக் கொண்டோம், அதில் இலங்கை பற்றிய எங்கள் கொள்கைக்கு கடுமையாக கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. நாங்கள் எங்கள் அதிருப்தியை அவரிடம் தெரிவித்தோம் மற்றும் நாங்கள் ஆட்சேபனை தெரிவித்த கருத்துக்களை நீக்கி விடுவதாக அவர் எங்களுக்கு உறுதியளித்தார்.

மேடையில் பேசும்போது, ஜனாதிபதி ஜெயவர்த்தனா, காந்தி மற்றும் நேரு அவர்களின் நாட்டில் தனக்கு கிடைத்த வரவேற்பையிட்டு தாம் மிகவும் கவரப்பட்டதாகவும் மற்றும் தான் தன்னுடைய இதயத்தின் ஆழத்தில் இருந்து பேசுவதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் அவர் இலங்கையிலுள்ள தமிழ் பயங்கரவாதிகளை இந்தியா ஆதரிப்பதை பற்றிய தனது தாக்குதலை ஆரம்பித்தார், மற்றும் அவர் நேரு மற்றும் சூ என்-லாய் ஆகியோரிடையே கையெழுத்தான பஞ்சசீல ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டு மற்ற நாடுகளின் உள் விவகாரங் களில் தலையிடாமை பற்றி அது குறிப்பிடுவதாகவும் அங்கு தெரிவித் தார். அதற்குப் பதிலளிப்பதில்லை என ராஜீவ் புத்திசாலித்தனமாக முடிவு செய்தார்.

முதலாவது நாள் முடிவில் அவர், ப.சிதம்பரம் அவர்களையும் மற்றும் என்னையும், தமிழீழ விடுத லைப் புலிகளின் நிறுவுனரும் மற்றும் அதன் தலைவருமான வேலுப் பிள்ளை பிரபாகரனை தன்னுடன் அழைத்து வந்திருந்த தமிழ் நாட்டு முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனைச் சந்திக்கும்படி அறிவுறுத்தினார்.



ஆங்கிலத்தில் நல்ல பரிச்சயமில்லாத எம்.ஜி.இராமச்சந்திரன் தன்னுடைய அமைச்சர்களில் ஒருவரான (பண்ருட்டி) இராமச்சந்திரன் என்பவரை மொழி பெயர்ப்பாளராக தன்னுடன் அழைத்து வந்திருந்தார்.

பிரபாகரனாலும் கூட ஆங்கிலம் பேச முடியாது. அவர் தன்னுடைய மொழி பெயர்ப்பாளராக அன்ரன் பாலசிங்கத்தை அழைத்து வந்திருந் தார். பாலசிங்கம் கம்யுனிச கொள்கை களுடன் மறைமுக ஈடுபாடுள்ளவர், ஒருவரால், ஒன்றில் அலட்சியப் படுத் தவோ அல்லது நம்பவோ முடியாத ஒரு வகையான மனிதர் பாலசிங்கம்.

பிரபாகரன் குள்ளமாக மற்றும் வலிமையான உடற்கட்டு உள்ளவராக இருந்ததுடன் பிடிவாதம் மற்றும் ஒரு வழிப் போக்கு குணமும் உள்ளவராக காணப்பட்டார். அவர் தனது இலட்சிய மான ஈழத்தில் உறுதியும், மற்றும் அதை விட்டுக் கொடுக்காதவராகவும் இருந்தார்.

இலங்கைத் தமிழர்களின் கோரிக் கைகளைப் பற்றி இந்தியா முழுமை யாக அறிந்துள்ளது. பிரதம மந்திரி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் தமிழர்களின் மனக்குறைகளைப் பற்றி இதமாக பேசியுள்ளார். இந்தியா ஈழத்தை எதிர்ப்பதுடன் இலங்கையின் இறையாண்மையையும் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் ஆதரிக்கிறது எனத் தெரிவித்தேன்.

பிரபாகரனுடன் பேசுவது என்பதே ஒரு மூச்சு முட்டும் அனுபவமாக இருந்தது. அவர் இந்தியா மற்றும் இலங்கை இராணுவங்களை ஒருமித்து எதிர் கொள்ள வேண்டிய நேரம் வரக்கூடும் என அவரிடம் நான் தெரிவித்தேன். அவர் நெஞ்சழுத்தத்துடன் பிடிவாதமாக இருந்தார்.

பெங்களூரில் பிரபாகரனின் பிரசன் னத்தை நாங்கள் ஒரு இரகசியமாகவே வைத்திருந்தோம், ஆனால் எப்படியோ ஜனாதிபதி ஜெயவர்த்தனா அதைத் தெரிந்து கொண்டார். "ராஜீவ் அவனை என்னிடம் ஒப்படையுங்கள், ஒரு தமிழ னான யாழ்ப்பாண மேயரை சுட்டுக் கொன்றதுக்காக அவனை நான் யாழ்ப் பாணத்தில் தூக்கிலிட வேண்டும்" என அவர் கேட்டார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கு ராஜீவ் மிகவும் அவசரப்பட்டார். ஒருவேளை பஞ்சாப் மற்றும் அசாம் நெருக்கடிகளை அவர் வெற்றிகரமாக கையாண்டதால், அது அவருக்கு நம்பிக்கையை கொடுத்திருக்கலாம்.

எனது உறுதியான நம்பிக்கை என்னவென்றால் பிரதமர்கள் மற்றும் ஜனாதிபதிகள் நடைமுறை விபரங்கள் உள்ள பேச்சு வார்த்தைகளில் தலையி டக் கூடாது என்பதுதான். அவர்களுக்கு அதற்கான நேரமோ அல்லது நிபுணத்து வமோ கிடையாது. வாரங்கள் கடந்து போனபோது ஜெயவர்த்தனா, ராஜீவ் காந்தியை சமாளிக்க முடியாமல் திண்டாடுவதாக எனக்குத் தோன்றியது.

சார்க் மாநாடு முடிந்த அடுத்த சில மாதங்கள் ராஜாங்க அமைச்சர் ப.சிதம்பரமும் நானும் இலங்கைக்கு பல பயணங்களை மேற்கொண்டோம். சிதம்பரமும் நானும் மேற்கொண்ட மிகவும் முக்கியமான பயணம் 19 டிசம்பர் 1986 இல் நடந்தது....

நாங்கள் கொழும்பில் இருந்தபோது, பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ, தனது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் கூட்டப்பட்ட கூட்டத்தில் பங்குபற்ற வில்லை. அது மட்டுமன்றி அவர் எங்களைச் சந்திப்பதற்கும் மறுத்து விட்டார். எங்கள் விஜயத்தின்போது, டிசம்பர் 19ஆம் திகதிய தீர்மானங்கள் யாவும் இரு பகுதியினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் எதிர்கால பேச்சு வார்த்தைகளுக்கான ஒரு குறிப்பாகவும் அது இருந்தது.

நாங்கள் தில்லிக்கு திரும்பியதும் இந்திய பிரத்மரிடம், இலங்கை அரசாங்கம் பிளவுபட்டதாக உள்ளது. பிரதம மந்திரி பிரேமதாஸ மற்றும் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் ஒரு பக்கமாகவும், காணி அபிவிருத்தி, மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸா நாயக்க மற்றும் அமைச்சர் டீ சில்வா ஆகியோர் ஜனாதிபதி பக்கமுமாக உள்ளார்கள் எனத் தெரிவித்தோம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா முற்றி லும் சாதகமாக உள்ளார் என்பதாகவே எனது மதிப்பீடு இருந்தது. அவர் நன் றாகப் பேசியதுடன் ஒருபோதும் அவ சரம் காட்டவில்லை. ஒரு பக்தியுள்ள பௌத்தரான அவர் தனது குரலை ஒருபோதும் உயர்த்தியதேயில்லை, மற்றும் எப்போதும் அமைதியாகவே இருந்தார். ஆனால் அவரிடம் எதிர்மறை யான ஒரு மறுபக்கம் இருந்தது - அவர் புத்திசாலி மற்றும் நம்ப முடியாதவர் மற்றும் அவ்ரை வீழ்த்துவது கடினம்.

(தொடரும்)

## தெரியுமா




- தனக்கென தாய்மொழி இல்லாத நாடு சுவிட்சர்லாந்து.
- ரயில் இல்லாத நாடு ஆப்கானிஸ்தான்.
- விவாகரத்து பண்ண அனுமதிக்காத நாடு அயர்லாந்து.
- இரவு நேர நீதிமன்றங்கள் இயங்கும் நாடு சிங்கப்பூர்.
- பழமையான நகரங்கள் நிறைந்த நாடு சிரியா.
- நதிகள் இல்லாத நாடு சவூதி அரேபியா.
- உலகில் 26 நாடுகளுக்கு கடற்கரையே கிடையாது.
- மீனைக் கடவுள் அவதாரமாகக் கருதுகிறார்கள் திபெத்தியர்.
- இஸ்ரேல் நாட்டில் ஒட்டகங்களுக்குத் தனி மருத்துவமனை உள்ளது.
- பூட்டான் நாட்டின் மற்றொரு பெயர் "இடிபோன்ற ட்ராகன்களின் நாடு".
- ரொட்டி நாடு என்று அழைக்கப்படுவது ஸ்கொட்லாந்து நாடாகும்.
- கழுகை தேசியப் பறவையாகக் கொண்டுள்ள நாடு அமெரிக்கா.
- ஆஸ்திரியா, அல்பேனியா, ஜேர்மனி, ஸ்பெயின், அமெரிக்கா ஆகிய நாடுகளின் தேசிய விலங்கு கழுதை. மிகக்குறைந்த நேரம் தூங்குவதும் கழுதைதான்.
- சுற்றுப்புற சூழ்நிலையால் அதிகம் மாசு காணப்படுவதில் முன்னிலையில் உள்ள நாடு மெக்ஸிகோ.
- சிறப்பான வாழ்விடம் கொண்ட நகரங்களின் தர வரிசையில் முதலிடத்தைப் பெறுவது ஸ்வீடன் நாட்டுத் தலைநகர் ஸ்ரொக்ஹோம்.
- அரசின் உயர்ந்த அதிகாரப் பதவிகளில் பெரும்பாலும் பெண்களே உள்ள முதல் நாடு - நியூசிலாந்து.
- வீட்டுக்கு வீடு காளான் வளர்க்க வேண்டும் என்று சட்டம் உள்ள நாடு ஸ்வீடன்.
- பின்லாந்து நாட்டு மக்கள் மற்ற எல்லா நாட்டு மக்களையும்விட அதிக அளவில் கோப்பி குடிக்கிறார்கள்.
- உலகில் மூன்று நாடுகளில் மட்டும்தான் சந்தன மரங்கள் அதிக அளவில் உள்ளன. அவை இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ்.
- உலக அளவில் இஞ்சி உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் இரு நாடுகள் இந்தியா மற்றும் சீனா.

## ஓர்

அட்லஸ் புத்தகத்தில் ஐஸ்லாந்து நாட்டைத் தேடிக் கண்டுபிடிப்பது சற்று சிரமம்தான். அட்லாண்டிக் கடலின் வட கோடியில் அதாவது ஐரோப்பாவுக்கு வட மேற்கே உள்ள சிறிய தீவு நாடு தான் ஐஸ்லாந்து.

பெயருக்கு ஏற்றபடி ஐஸ்லாந்தில் நிறைய ஐஸ் உண்டு. எங்கு பார்த்தாலும் உறைபனிக்கட்டி தென்படும். அந்த ஐஸ்கட்டி நாட்டில் தான் நிறைய நெருப்பும் இருக்கிறது. அது தான் எரிமலைகள். அந்த சின்ன நாட்டில் 20 எரி- மலைகள் உள்ளன.

இப்போது ஐஸ்லாந்தில் ஒரு எரிமலை மிரட்டி வருகிறது. அந்த எரிமலை வட்டாரத்தில்



தொடர்ந்து நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து அந்த எரிமலை நெருப்பையும் எரிமலைச் சாம்பலையும் கக்க ஆரம்பிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இது ஐரோப்பிய நாடுகளில் விமான சேவைகளை நடாத்தும் நிறுவனங்களின் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்துள்ளது.

ஏனெனில் எரிமலையிலிருந்து வெளிப்படும் எரிமலைச்



# கணனி: தெரிந்தே செய்திடும் தவறுகள்

தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் இன்று நம் வாழ்வின் ஓர் முக்கிய அங்கமாக, அடிப்படை சாதனங்களாக மாறிவிட்ட பின்னரும், பல மோசமான பழக்க வழக்கங்களை, அவை மோசம் என்று தெரிந்த பின்னரும், மாற்றிக் கொள்ளாமல் தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். அவை என்னவென்று பார்க்கலாம்.

**1. மோசமான சூழ்நிலையில் கணனியை இயக்குதல்:** கணனி முன்னால், பல மணி நேரங்கள் தொடர்ந்து அமர்ந்து அதனை இயக்குவது பலருக்கு வாடிக்கையாகிவிட்டது. நம்முடைய முதுகைத் தாங்கிப் பிடிக்காத நாற்காலி, உயரத்தை அட்ஜஸ்ட் செய்ய முடியாத மேசை மற்றும் நாற்காலிகள், உடல் வலி வந்த பின்னரும் உட்கார்ந்து பணியாற்றும் நிலையை மாற்றிக் கொள்ளாமல் தொடருதல் ஆகியவை நமக்குப் பெரிய அளவில் துன்பத்தை வரவழைக்கும் விஷயங்களாகும்.

**2. ஒரே அழுக்கு:** கணனி, கீ போர்ட், மவுஸ், சிபியு - இவை யாவும் மோசமான தூசு மற்றும் அழுக்கு படிந்த நிலையிலேயே இயக்கப்படுகின்றன. பல கீ போர்ட்கள், அழுக்குப் படிந்ததனால், முற்றிலும் நிறம் மாறி, கறைகளுடனேயே காணப்படுகின்றன. அண்மையில் நடாத்தப்பட்ட ஆய்வில், பொதுக் கழிப்பறைகளில் அமரும் இடத்தில் காணப்படும் கிருமிகளைக் காட்டிலும் 60 மடங்கு மேலாகக் கிருமிகள், கீ போர்டில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு ஒருமுறை என இல்லாவிட்டாலும், வாரம் ஒருமுறையாவது, இவற்றைச் சுத்தப்படுத்தும் திரவம் கொண்டு சுத்தப்படுத்தினால், இயக்குபவரின் உடல் நலம் பாதுகாக்கப்படும் அல்லவா?

**3. தொல்லை தரும் வகையில் போன் பேசுதல்:** நம்மில் பலர், பெரும்பாலானவர்களின் வெறுப்புக்கு ஆளாவது, நாம் மொபைல் பயன்படுத்தும் முறைகளினால்தான். சாப்பிடும் மேசைகளிலிருந்து போன்களைத் தள்ளியே வைக்கவும் கடைகள், ஜிம், பொது அலுவலகங்கள், மருத்துவ மனை, பஸ், தெருவில் எல்லாம் மொபைல் போனில் உரக்கப் பேசுவதை எப்போது நிறுத்தப் போகிறோம்?

**4. Back-up:** நம்மில் பெரும்பாலோர், கணனியில் அமைக்கப்படும் பைல்களுக்கான Back-up பிரதி எடுப்பதே இல்லை. சரியான கால இடைவெளியில், கணனியில் உள்ள அனைத்து பைல்களையும், இன்னொரு எக்ஸ்டெர்னல் ஹார்ட் ட்ரைவிற்கு மாற்றி வைப்பது, நல்லதொரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும்.

**5. தொடர்ச்சியாக கண்னி முன்:** பலர், பல கணனி விளையாட்டுக்களை வெறியோடு தொடர்ந்து நான்கு மணி நேரத்திற்குப் பின்னரும் கூட விளையாடுகிறார்கள். இடையே ஓய்வு எடுக்காமல், தண்ணீர் அருந்தாமல், கால்கள் மற்றும் உடம்பை அசைக்காமல் நாற்காலியில் அமர்ந்தே இருப்பது, உடலுக்குத் தீங்கினை விளைவிக்கும் என்பது தெரிந்தும் ஏன் பலர் இந்தப் பழக்கத்தினை மாற்றுவதில்லை?

**6. ஷட் டவுண்:** லப்டொப் கணனிகளை, அதில் வேலை முடிந்த பின்னர், அப்படியே திரை உள்ள மேல் மூடியை மூடி எடுத்துச் செல்லலாம். ஆனால், இது நல்லதல்ல; லப்டொப் வெகுநாட்கள் உழைக்க வேண்டும் என எண்ணினால், அதனை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஷட் டவுண் செய்திடும் பழக்கத்தினை மேற்கொள்ள வேண்டும்.

**7. சிஸ்டம் அப்டேட்:** பல வேளைகளில், நமக்கு நாம் பயன்படுத்தும் சிஸ்டம், அப்ளிகேஷன் சொப்ட் வேர் புரோகிராம்கள் மற்றும் அன்டி வைரஸ் புரோகி ராம்கள் ஆகியவற்றிற்கு அப்டேட் பைல்கள் உள்ளன. அப்டேட் செய்திடலாமா? என்று கேள்வி வரும். அந்த வேலையை மேற்கொண்டு, பின்னர், கணனியை மறுபடியும் ரீஸ்டார்ட் செய்திட சோம்பேறித்தனப்பட்டு, பலர் அப்டேட் செய்வதைத் தவிர்த்து விடுகின்றனர். இது தவறு மட்டுமின்றி, தேவையற்ற அபாயத்தினையும் வரவழைக்கும். இதன் மூலம், நாம் வசதிகளை மட்டும் இழப்பதில்லை; வைரஸ் எதிரான பாதுகாப்பினையும் இழக்கிறோம்.

**8. உங்கள் பாஸ்வேர்ட்:** ஏறத்தாழ ஐந்துக்கும் மேற்பட்ட பாஸ்வேர்ட்களை ஒருவர் ஒரு நாளில் குறைந்தது பயன்படுத்த வேண்டியுள்ளது. உங்கள் பாஸ்வேர்ட் 1234 என உள்ளதா? உங்கள் பெயர், பிறந்த நாள், தொலைபேசி எண் என உள்ளதா? நிச்சயம் அவை பாதுகாப்பானவை இல்லை. பல ஆண்டுகளாக ஒரே பாஸ்வேர்டையே பயன்படுத்தி வருகிறேன் என்று பெருமை அடித்துக் கொள்கிறீர்களா? இதனை எச்சரிக்கும் செய்திகளை உதாசீனம் செய்கிறீர்களா? தவறு.

**9. பற்றரி ட்யூனிங்:** லப்டொப் கணனியின் பவர் ப்ளக்கைச் செருகி, அதனைப் பயன்படுத்துவது மிக எளிதுதான். ஆனால் அதோடு நின்றுவிடக் கூடாது. பற்றரிகளை அதன் திறன் முழுமையாகக் கிடைக்கும் வகையில், அதனை சார்ஜ் செய்வதுடன் ட்யூனிங் செய்திடவும் வேண்டும். சில மாத இடைவெளியில், பற்றரிகளை முழுமையாகச் சோதனை செய்து, அவற்றின் திறனை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் தயார் செய்திட வேண்டும்.

# மோனாலிசா

"இந்த ஓவியத்தில் என்ன இருக்கிறது? எனக்குப் பிடிக்கவில்லை" என்று டாவின்சியின் மோனாலிசா ஓவியத்தின் முன் நின்று கொண்டு சொன்ன ஒரு பெண்ணுக்கு அருகில் இருந்தவர் கூறியது

"மோனாலிசா காலத்தை வென்றவள். அவள் முன்னால் நிற்கும்போது மதிப்பிடப் படுபவர் நீங்கள் தான். அவள் இல்லை".

**(பி.ஏ.கே - 'மேற்கத்திய ஓவியங்கள்' புத்தகத்தில்)**





# சகுனியின் மறுகதை

காந்தார நாட்டு மன்னன் சுபாலாவின் கடைசி மகன் சகுனி. இவனுக்கு மூத்த சகோதரர்கள் 99 பேர், ஒரு சகோதரி காந்தாரி. காந்தாரியின் ஜாதகப்படி அவள் கணவன் இறந்து விடுவான் என்று கணித்திருந்ததால் அவளுக்கு ஒரு கிடாய் ஆட்டை மணம் செய்து வைத்து, பிறகு அதை பலி கொடுத்து விட்டு, கண் பார்வை இல்லாதவனான திருதராஷ்டிரனுக்கு மறுமணம் செய்விக்கிறான் சுபாலா. காந்தாரிக்கு நூறு பிள்ளைகள். மூத்தவன் துரியோதனன்.

ஒருமுறை துரியோதனனைப் பார்த்து பீமன், "நீ விதவையின் மகன்" என்று சொல்ல... இதனால் அவமானம் அடைந்த துரியோதனன் சுபாலாவையும் அவனது நூறு பிள்ளைகளையும் பாதாளச் சிறையில் அடைக்கிறான். அவர்கள் அனைவரும் சிறையிலேயே சாக வேண்டும் என்று திட்டமிட்டு, தினம் அவர்களுக்கு ஒரு கவளம் சோறும், நத்தைக் கூட்டில் நீரும் தர ஏற்பாடு செய்கிறான்.

எல்லோரும் செத்துப் போவதை விட யாரேனும் ஒருவராவது உயிர் பிழைத்து துரியோதனனைப் பழி வாங்க வேண்டும் என்று எண்ணும் சுபாலா, நூறு பேரிலும் புத்திசாலியான சகுனியைத் தேர்ந்தெடுத்து அவனுக்குத் தங்களின் உணவைத் தருகிறான். சகோதரர்களும் தந்தையும் ஒவ்வொருவராகத் தன் கண் முன்னே சாவதைப் பார்க்கும் சகுனி மட்டும் பிழைத்து வந்து துரியோதனனோடு ஒட்டி உறவாடிக் கெடுக்கிறான். குரு வம்சம் கூண்டோடு அழியக் காரணமாக இருக்கிறான்.

இந்தக் கோணத்தில் பார்த்தால் சகுனி எல்லோரும் நினைப்பது போல் மகாபாரதத்தின் வில்லன் அல்ல. துரியோதனனை அழிப்பதற்காகவே அவன் துரியோதனனோடு இருக்கிறான்.

இந்தக் கதை ஒரிஜினல் மகாபாரதத்தில் இல்லை. பாரதத்தின் உபகதைகளில் இதுவும் ஒன்று. சமகாலத் தமிழ் நாவல்களில் சகுனியைப் போன்ற ஒரு பாத்திரம் உண்டு. அரு. ராமநாதன் எழுதிய வீரபாண்டியன் மனைவி என்ற நாவலில் வரும் ஜனநாதக் கச்சிராயன் சகுனியின் இன்றைய வடிவுமே.

# ர் எரிமலை மிரட்டுகிறது

– என்.ராமதுரை –

சாம்பல் வானில் பல ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்புக்குப் பரவும். இது வானில் பறக்கும் விமானங்களுக்குப் பாதிப்பை உண்டாக்கும்.

இப்போது மிரட்டி வரும் எரிமலையின் பெயர் பர்டார்புங்கா. பர்டார்புங்கா எரிமலை ஐஸ்லாந்தின் வடமேற்குப் புறத்தில் உறைபனி படிந்த இடத்தில் உள்ளது. பர்டார்புங்கா எரிமலை வாய் இந்த உறைபனிக்கு அடியில் உள்ளது. எரிமலை வாயின் அகலம் 10 கிலோ மீற்றர். 1910 ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போது தான் அது மிரட்டுகிறது.

வானில் எரிமலைப் புகையின் ஊடே விமானத்தைச் செலுத்திச் செல்வது ஆபத்து. முதலாவதாக விமானத்தை ஓட்டிச் செல்பவருக்கு எதிரே என்ன இருக்கிறது என்பது தெரியாது. விமானியின் முன்புறமுள்ள கண்ணாடி மீது சாம்பல் படிந்து விடும். இதனால் விமான நிலையத்தில் இறங்குவதிலும் பிரச்சினை ஏற்படும். இரண்டாவதாக எரிமலைப் புகையில் அடங்கிய சாம்பல் விமானத்தின் மற்ற வெளிப்புறப் பகுதிகளில் படிந்து பிரச்சினையை உண்டாக்கும்.

மூன்றாவது பிரச்சினைதான் ஆபத்தானது. எரிமலைச் சாம்பலில் அடங்கிய துகள்கள் விமான எஞ்சினுக்குள் புகுந்த பின் உருகி விமான எஞ்சின் பகுதிகள் மீது படியும். இது கண்ணாடியை உருக்கி எஞ்சின் பகுதிகள் மீது ஊற்றியது போன்ற விளைவை உண்டாக்கும். இதன் விளைவாக விமான எஞ்சின்கள் சிறிது நேரம் தற்காலிகமாக செயற்படாமல் போகும்.

1982 ஆம் ஆண்டில் கோலாலம்பூரிலிருந்து நியூசிலாந்து சென்று கொண்டிருந்த ஒரு விமானம் எரிமலைப் புகையில் சிக்கிக் கொண்ட போது நான்கு எஞ்சின்களும் சிறிது நேரம் செயற்படாமல் போயின. நல்ல வேளையாக அவை மீண்டும் செயற்படத் தொடங்கி, அது பத்திரமாக இந்தோனேசியாவின் ஜாகர்த்தா விமான நிலையத்தில் இறங்கியது. எனினும் விமானத்தை பழுது பார்க்கப் பெரும் செலவு ஏற்பட்டது.

1989 டிசம்பரில் டோக்கியோவுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு விமானத்தில் நான்கு எஞ்சின்களும் எரிமலைச் சாம்பலின் விளைவாக சிறிது நேரம் செயற்படாது போயின.

இந்த மாதிரி சம்பவங்களுக்குப் பிறகு உலகில் ஏதாவது ஒரு பகுதிக்கு மேலே வானில் எரிமலை சாம்பல் இருக்குமானால் அது பற்றி எல்லா விமானங்களுக்கும் எச்சரிக்கை விடுக்கும் ஏற்பாடு அமுலுக்கு வந்தது.

ஐஸ்லாந்தில் 2010 ஆம் ஆண்டில் Eyja fjallajokull என்னும் வாயில் நுழையாத பெயரைக் கொண்ட எரிமலை பெரும் புகையைக் கக்கிய போது ஐரோப்பிய நாடுகள் இடையே இயங்குகிற மற்றும் அவ்வழியே இயங்குகிற பல ஆயிரம் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன.


இப்போது பர்டார்புங்கா எரிமலை தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

# பழமொழிகள்




அகல இருந்தால் நிகள உறவு,
கிட்டவந்தால் முட்டப் பகை.
அகல உழுகிறதை விட ஆழ உழு.
அகல் வட்டம் பகல் மழை.
அசைந்து தின்கிறது யானை,
அசையாமல் தின்கிறது வீடு.
அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
அடக்கமே பெண்ணுக்கு அழகு.
அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.
அடாது செய்தவன் படாது படுவான்.


# கண்டுபிழியுங்கள்




(i) (ii) (iii)

கீழே ஆரம்பத்தில் தரப்ட்ட அமைப்பில் எதிர்ப் பக்கங்களில் அதே இலக்கம் உள்ளது இதற் கேற்ப பிரித்தால் கிடைக்கும் அமைப்பு யாது?


(i) (ii) (iii)



* ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை ஒன்றின் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?




(i) (ii) (iii)



(i) (ii) (iii)

* கீழே தரப்பட்ட செயன்முறையை அவதானித்து அடுத்துவரக் கூடியது எதுவெனக் கண்டு கீறிடுக.



(i) (ii) (iii)

# விடுகதைகள்

1) வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன ?
   1) விருந்தினர் 2) மாணவர் 3) செருப்பு 4) அன்பளிப்பு
2) ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன ?
   1) குட்டை 2) கடல் 3) குளம் 4) கிணறு
3) மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல, பட்டை போட்டிருப்பான் சாமி அல்ல அவன் யார் ?
   1) குயில் 2) தேவாங்கு 3) உடும்பு 4) அணில்
4) வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி அவர்கள் யார்?
   1) கதவும் தச்சனும் 2) முதலாளியும் நாயும் 3) பூட்டும் சாவியும 4) கடலும் நீரும்
5) எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன ?
   1) வானம் 2) மின்விசிறி 3) காகிதம் 4) காற்று
6) உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன ?
   1) பாய் 2) பாம்பு 3) அட்டை 4) தடி
7) மழை காலத்தில் குடை பிடிப்பான் அவன் யார் ?
   1) வளி 2) தொப்பி 3) காளான் 4) காற்று
8) யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும் அது என்ன ?
   1) மரக்கதவு 2) கண் இமை 3) யன்னல் 4) வாசல்
9) அடிக்காமல்,திட்டாமல் கண்ணீரை வரவழைப்பாள் அவள் யார் ?
   1) தடி 2) சவுக்கு 3) காயம் 4) வெங்காயம்
10) வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார் ?
   1) ஆறு 2) குளம் 3) கடல் 4) கிணறு

**இலக்கத்தொடரை அவதானியுங்கள் அதில் பல புதிர்களை உருவாக்கலாம்**


$$1 \times 8 + 1 = 9$$
$$12 \times 8 + 2 = 98$$
$$123 \times 8 + 3 = 987$$
$$1234 \times 8 + 4 = 9876$$
$$12345 \times 8 + 5 = 98765$$
$$123456 \times 8 + 6 = 987654$$
$$1234567 \times 8 + 7 = 9876543$$
$$12345678 \times 8 + 8 = 98765432$$
$$123456789 \times 8 + 9 = 987654321$$

# பாட்டி சொன்ன புதிர் விடை சொல்லுங்கள்.

பாட்டி அந்த தெருவில் கோலிக் குண்டு விளையாடிட்டு இருந்த சிறுவர்களிடம், 10 கோலிக்குண்டுகள் வாங்கி வந்து, "அர்ஜுன், இந்த 10 கோலிக் குண்டுகளை, ஐந்து நேர் கோடுகளில் நீ அடுக்க வேண்டும், ஒவ்வொரு கோடுகளிலும் 4 கோலிக்குண்டுகள் இருக்க வேண்டும், கோடுகள் ஒன்றை ஒன்று குறுக்கிட்டு போகலாம். இது தான் புதிர், உனக்கு பத்து நிமிடம் தருகிறேன், கண்டுபிடி" என்றார்.

பலமாக யோசித்த அர்ஜுனுக்கு பதில் தெரியவில்லை. பாட்டியிடமே பதில் என்ன என்று கேட்டான். பாட்டி கொடுத்த சரியான பதில் என்ன? சரியான பதில் உங்களுக்கும் தெரிந்தால் எங்களுக்கும் சொல்லுங்கள்.

# புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முக்கியம்



ஒரு ஊரில் கண்பார்வை இல்லாத ஒருவர் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தார். அவர் தினமும் "கடவுளே என்னை இப்படிப் படைத்து விட்டாயே...உனக்கு கண் இல்லையா? தினமும் நான் கஷ்டப்படுகிறேனே..." என்று புலம்பியபடி கடவுளைத் திட்டிக் கொண்டேயிருந்தார்.அவனது திட்டு பொறுக்க முடியாமல் கடவுள் ஒரு நாள் அவன் முன் தோன்றி, "நான் கடவுள் வந்திருக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். ஆனால் ஒரு நிபந்தனை. ஒரே ஒரு வரம் மட்டும்தான் கேட்கவேண்டும்." என்றார்.

பார்வையற்றவரும் அதற்கு ஒப்புக் கொண்டு சிறிது நேரம் யோசித்தார். பின்பு சிறிது நேரம் யோசித்து கீழ்கண்ட வரத்தைக் கேட்டார்."ராஜ வீதியில் தங்கத் தேர் ஓட்டி விளையாட, அவனைப் பெற்ற தாய் வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு ஊட்டுவதை என்னுடைய வீட்டின் ஏழாவது மாடியிலிருந்து நான் பார்த்து மகிழ வேண்டும்."இந்த வரத்தில் பார்வை இல்லாதவன் , தனக்குப் பார்வை வேண்டும், ராஜயோக வாழ்க்கை வாழ வேண்டும், நூறாண்டு வாழ வேண்டும், ஏழு மாடி வீடு வேண்டும் என்பதயெல்லாம் ஒரே வரத்தில் கேட்டு விட்டான்.அவனுடைய புத்திசாலித்தனமான பதிலைப் பாராட்டிய கடவுள் அவன் கேட்ட வரத்தைக் கொடுத்து மறைந்தார்.புத்திசாலித்தனம் வாழ்க்கையில் முன்னேற முக்கியம் என்பது உண்மைதானே?

# உரும்பிராய் வாகையடி வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப் புரைக்கமைய நெல்சிப் திட்டத்தின்கீழ் உரும்பிராய் வாகையடி வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வீதியின் புனரமைப்பு வேலைத் திட்டத்தினை வலி.கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன், வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் கந்தையா துரைராஜா, உபதவிசாளர் கந்தையா தர்மலிங்கம் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை, அச்சுவேலி பயிற்றோலை வீதி, கோப்பாய் வடக்கு இலகடிவீதி, உரும்பிராய் ஊரெழு மயான வீதி, அச்செழு வேவிபுரம் போயிட்டி குறுக்குவீதிகளையும் சென்று பார்வையிட்டிருந்தனர்.

இவ்வீதிகளும் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைப்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சாரம் வழங்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு பாண்டியன்குளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் ஒட்டங்குளம் கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்க வில்லை என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தாங்கள் மீள்குடியமர்ந்து 05 வருடங்கள் ஆகியும் தமது கிராமத்தை எவரும் கவனிப்பதில்லை எனவும் இதனால் உயர் வகுப்பு மாணவர்கள் கைவிளக்குடன் கல்வி கற்பதாகவும் தெரிவித்தனர்.

பலர் தமது கிராமத்திற்கு வருவதாகவும் அரசியல் கண்ணோட்டத்தில் கதைப்பதாகவும் அதனால் எவ்வித பயன்பாடுகள் இல்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர் எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (140)

# பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வும்



யாழ் மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்துடன் இணைந்து லண்டன் வியாபார தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கிடையே நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி நடாத்திய மாணவர்களுக்கான கவிதை கட்டுரை பேச்சுப்போட்டி பாடல் சமயப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் உதய பெரேராவும் மற்றும் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் படைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொகான் டயஸ் இந்தியாவின் துணைத் தூதுவர் எஸ்.மூர்த்தி வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் படை அதிகாரிகள் கல்வி அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கும்பாபிஷேகம்

நாகர்கோவில் கண்ணகை அம்மன் கோயில் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல்நாள் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 5 மணி வரை எண்ணைக்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

# பஸ்ரியன் சந்தியில் நேற்று முன்தினம் விபத்து




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான வீதி பஸ்ரியன் சந்தியில் நேற்று முன்தினம் மாலை 3.20 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரு வாகனங்கள் சேதமடைந்துள்ளன. தென்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ் ஒன்றுடன் அதன் பின்னால் வந்து கொண்டிருந்த ஹையஸ் ரக வாகனம் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ். போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (51)

# பதிவிருக்கப் பெட்டகம்

சில நாட்களுக்கு முன்பாக இலங்கை அகதிகள் முகாம் ஒன்றுக்கு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்தில் காணக் கிடைத்த காட்சிகள் இன்னும் மனதை விட்டு அகல மறுக்கிறது. சக ரத்த பந்தங்களைத் தேடி உயிர் தப்பிப் பிழைத்து வந்தவர்களை அடிப்படை வசதிகளோ சுகாதாரமான சூழ்நிலையோ அற்ற ஒரு சூழ்நிலையில் சிறைக் கைதிகளுக்கும் கீழாக நாம் நடத்திக் கொண்டிருப்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

நான் பயணம் செய்த உலக நாடுகளில் அங்குள்ள அகதிகளை தமது சொந்தக் குடிமக்களுக்கு நிகராக நடத்துவதைப் பார்த்த எனக்கு, எம்மை நம்பி வந்த ஈழத் தமிழர்களுக்கு எவ்வளவு கீழ்த்தரமான, எந்த விதத்திலும் நியாயம் இல்லாத வாழ்க்கையை வழங்கி இருக்கிறோம் என்பதை நினைத்து அவமானமே மிஞ்சியது. **– கவிஞர் சல்மா**

ஈழப் போராட்டம் தொடங்கிய எழுபதுகளில், பாலஸ்தீனர்கள் மட்டுமே தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவாக இருந்தார்கள். ஈழ விடுதலைக்காக போராடப் புறப்பட்டவர்களுக்கு லெபனானில் போர்ப் பயிற்சி கொடுத்தார்கள். ஒரே ஆசியக் கண்டத்தில் உள்ள, இரண்டு நவ– காலனித்துவ நாடுகளில் நடக்கும் ஈழப் போராட்டமும், பாலஸ்தீன போராட்டமும் ஒன்று என்று உளப்பூர்வமாக நம்பினார்கள்.

அன்றைக்கு தமிழ்நாட்டில் கூட அந்தளவு ஈழ ஆதரவு இருக்கவில்லை. “இந்தியாவில் இருந்து பிழைக்கப் போனவர்கள் தனி நாடு கேட்பது நியாயமா?” என்று தமிழர்கள் கூட கேட்டார்கள். தமிழகத்தில் புகலிடம் கோரிய ஈழப் போராளிகள், தங்குவதற்கு இடம் தேடித் திரிந்த காலம் ஒன்றிருந்தது. தமிழினப் பெருமை பேசிய அரசியல்வாதிகள் கூட ஆதரிக்கவில்லை.

அந்த வரலாற்றை பலர் இன்று மறந்து விட்டதற்கு, பிற்காலத்தில் ஊடுருவிய மொசாட், ரோ உளவாளிகளின் சூழ்ச்சிகளும் ஒரு காரணம். இடை நடுவில் புகுந்து, ஈழப் போராட்டத்தை கடத்திச் சென்றுள்ள இந்துத்துவா வாதிகள், ஈழத் தமிழர்களையும், பாலஸ்தீனர்களையும் நிரந்தரமாக பிரித்து விடப் பார்க்கிறார்கள். **– கலையரசன்**

புது டில்லியின் கடந்த கால சம்பிரதாயங்களை தகர்த்து இந்தியாவை புதியதும் தந்திரோபாயமிக்கதுமான பாதையில் மோடி வழிநடத்திச் செல்கிறார். காங்கிரஸைப் போன்று மேற்குலக சார்பு போக்கில் இழுபட்டுச் செல்லாமல், இந்தியாவே சிறந்ததாக உருவாக வேண்டும் என்பதே மோடியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இன்னுமொரு பனிப்போருக்கு பங்களிப்பு செய்வதிலும் பார்க்க மோடி மேற்குலக மற்றும் கீழைத்தேய நாடுகளுடன் தொடர்புகளை கொண்டிருப்பார். தொடர்ந்தும் சீனா தொடர்பில் புதுடில்லி எச்சரிக்கையாக இருக்கும் அதேநேரம், இந்தியா பல்முனை உலகமொன்றுக்கு பங்களிப்புச் செய்யும் மூன்றாவது சக்தியாக இருக்கும். **– பேராசிரியர் ரொஹான் குணரட்ன**

ஐ.நா. மனித உரிமை உயர் ஸ்தானிகரின் அலுவலகத்தால் நடத்தப்படும் அந்த விசாரணை நாட்டின் நற்பெயருக்கு இழுக்காக அமைவதால் அரசாங்கம் அதனை நிராகரிப்பதாக டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றின் போது வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறியிருக்கிறார்.

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக விசாரணை நடத்துவதானது நாட்டின் நற்பெயருக்கு இழுக்காக அமையும் என்பது உண்மை தான். ஆனால், அந்த விசாரணையின் போது அரசாங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்படுமேயானால் அது அதைவிட மோசமான நிலைமையை உருவாக்கும்.

முழு உலகமே பார்த்திருக்கும் போது இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனத்தில் ஆயிரக் கணக்கான மக்களை குண்டு வீசி கொலை செய்யும் போது அதனை கண்டிப்பதற்குப் பதிலாக் அவற்றை ஊக்குவிக்கும் மேற்கத்திய தலைவர்களுக்கு இலங்கையில் மனித உரிமை மீறல்களைப் பற்றிப் பேச தார்மிக உரிமை இல்லை என இலங்கை அரசாங்கத்தின் தலைவர்கள் கூறுவது முற்றிலும் உண்மை தான். ஆனால், இந்த நாட்டில் போலவே சர்வதேச ரீதியிலும் அரசியல் என்று வரும் போது ஆசாரங்களுக்கு அல்லாது அதிகாரத்துக்கே அங்கீகாரம் கிடைக்கிறது.

அந்த நிலைமையை எதிர்கொண்டு நாட்டுக்கு ஏற்படப் போகும் பெரும் அவப் பெயரை தடுத்துக் கொள்வது அல்லது அதனை குறைத்துக் கொள்வதே இன்று அரசாங்கத்தின் முன் இருக்கும் சவாலாகும். **– எம்.எஸ்.எம்.ஐயூப்**

# பாவனைக்குதவாத பொருட்களை களஞ்சியப்படுத்த ஆவணம் அவசியமானது

## நுகர்வோர் அதிகார சபை அறிவுறுத்து



பாவனைக்கு தகுதியற்ற பொருட்களை அழிப்பதற்கோ, மீள் ஏற்றுமதிக்கோ உட்படுத்தும் நோக்கில் உரிய ஆவணங்கள் இன்றி களஞ்சியப்படுத்தியிருப்பின், கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் இந்த நடைமுறை அமுல்படுத்தப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சட்டமூலத்தின் அதிகாரத்திற்கு அமைய இந்த புதிய உத்தரவு செயற்படுத்தப்படவுள்ளது. இதன்படி, காலாவதியான, விற்பனைக்கு தகுதியற்ற, நுகர்வுக்கு பயன்படுத்த முடியாத அனைத்து பொருட்களும் புதிய சட்டம் அமுல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாவனைக்குதவாத பொருட்களை அழிப்பதற்கோ, மீள்ஏற்றுமதிக்கோ களஞ்சியத்தில் வைத்திருந்தால், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகத்தர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை வர்த்தகர்கள் உரிய முறையில் ஆவணங்களை வைத்திருத்தல் அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய உத்தரவுகளுக்கு அமைய பொருட்களின் வகை, இலட்சினை, எடை மற்றும் கொள்ளளவு அலகு என்பன குறித்த ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


# மோடி இரட்டை வேடம் போடுகிறார் சுட்டிக்காட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு விடயத்தில் இந்தியாவின் தலையீடு அவசியமற்றது என தெரிவிக்கும் ஜே.வி.பி. இலங்கை விடயத்தில் நரேந்திரமோடி இரட்டை வேடம் போடுகின்றார் என குற்றம் சுமத்தியுள்ளது.

13 இற்கு அப்பால் சென்று அதிகாரங்களை வழங்க வேண்டும் என இந்திய பிரதமர் இலங்கையை வலியுறுத்தியுள்ள நிலையில் இது தொடர்பில் வினவிய போதே மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் மேலும் குறிப்பி டுகையில்

மாகாண சபை அதிகாரங்கள் அதற்கு அப்பாற் சென்ற அதிகாரங்கள் அனைத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குத்தான் தேவையே தவிர தமிழ் மக்களின தேவை இவையல்ல



வடக்கில் தமிழ் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். பொருளாதார ரீதியில் சிக்கல்கள் உள்ளன. இவை அனைத்தையும் விடுத்து மாகாண சபை அதிகாரங்களைக் கேட்டு நிற்பது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சுயநலத் தன்மையினையே வெளிப்படுத்துகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடனோ அல்லது அமெரிக்காவுடனோ பேசுவதானால் இலங்கையில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

வடமாகாணத்திற்கு தாராளமான வகையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவைற்றையும தாண்டிய பிரிவினைக்கு உதவும் வகையிலான அதி[illegible]ங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோருவதால் அரசாங்கம் வளைந்து கொடுக்கப்போவதில்லை.

தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களைப் பாதிக்கும் நடவடிக்கைக்கு இந்தியா துணை போகக் கூடாது இலங்கையின் நிலைப்பாட்டினை பிரதமர் நரேந்திரமோடி தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தமிழர்களின் மனதை வெல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களின் மனங்களை வெல் வதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் பாரிய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வரு வதாக தேசிய நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அமைச்சின் பிரதியமைச்சராக பீ. திகாம்பரம் அண்மையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டார். இதனையடுத்து தனது அமைச்சுக்கு வருகை தந்த அவரை வரவேற்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எங்களது தேசிய நல்லிணக்க அமைச்சின் மூலமாக இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதையே முக்கிய இலக்காகக் கொண்டுள்ளோம். அதற்கான செயற்றிட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க ஏராளம் செயற்றிட் டங்களை நடைமுறைப்ப டுத்தியுள்ளது. யுத்த முடிவின் பின் நமக்குள் இடைவெளி இல்லை என்பதை வெளிக்காட்டுவதற்கு அரசாங்கம் தன்னாலான வழிகளில் முயன்று வருகின்றது. இது தொடர்பான செய்திகளை தமிழ் மக்கள் மத்தியில் இலகுவாக எடுத்துச் செல்வதற்கு பிரதியமைச்சர் திகாம்பரத்தின் நியமனம் பெரிதும் உறுதுணையாக அமையும்.

எமது அமைச்சுக்கு தமிழர் ஒருவர் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியான விடயம் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# கொரிய நாட்டு பிரதிநிதி பிரதமருடன் சந்திப்பு




(கொழும்பு)

தென் கொரியாவின் ஜியோலெனம்டோ மாகாணத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கான ஆளுநர் வேங்க் மன்சாயி, பிரதமர் தி.மு. ஜயரத்னாவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அண்மையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்.

பிரதமரின் கோரிக்கைக்கு இணங்க இரு நாடுகளுக்கும் இடையில் கல்வித்துறைக்கான பரஸ்பர ஒத்துழைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையர்களுக்கு கொரிய மொழியைப் போதிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் கொரியாவில் மேற்கொள்ள ஆளுநர் வேங்க் மன்சாயி இணக்கம் தெரி வித்தார்.

# அமெரிக்கா பயணமானார் மகிந்த



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்காவுக்கு சென்றுள்ளதாக அலரிமாளிகை வட்டாரத தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர், அமெரிக்காவுக்கு கடந்த சனிக்கிழமை காலையிலேயே புறப்பட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சிறிய மருத்துவ பரிசோதனைக்காக ஜனாதிபதி, அமெரிக்காவுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவில் வசிக்கும ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின சகோதரரான டட்லி ராஜபக்ஷ, அண்மையில் இல[illegible]க வந்திருந்ததாகவும் அவருடனேயே ஜனாதிபதி, அங்கு சென்றுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நியூயோர்க்கில் அடுத்த மாதம் நடைபெறும் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமெரிக்கா செல்வதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதியின் செயலகம் ஏற்கெனவே உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மருத்துவரை அச்சுறுத்திய வெளிநாட்டு பிரஜை கைது



(கொழும்பு)

மருத்துவர் ஒருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் பிரித்தானிய பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் இலங்கையின் தென்பகுதி ஹிக்கடுவ, ஆராச்சிகந்த என்ற இடத்தில் இடம் பெற்றுள்ளது. குறித்த பிரித்தானிய பிரஜை, திரானகம என்ற இடத்தில் வாடகைக்கு தங்கியிருந்துள்ளார்.

இந்தநிலையில் அவரை சுகவீனம் என்று கூறி இளம்பெண் ஒருவர் ஆராச்சிகந்த அரச மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த பிரித்தானிய பிரஜை அதிகம் மதுபோதையில் இருந்ததாக கடமையில இருந்த மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இந்தவேளையில் பிரித்தானிய பிரஜை மருத்துவருக்கு அச்சுறுத்தல் விடுத்ததுடன், அவரின கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் நடந்து கொண்டதாக குற்றம் சுமத்தப்பட் டுள்ளது. இதனையடுத்து பிரித்தானிய பிரஜை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

# இரு வேறு விபத்துக்கள் இருவர் பலி, 15 பேர் காயம்

(கொழும்பு)

இருவேறு விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதோடு 15 பேர் காயமடைந்துள்ளனர். நீர்கொழும்பு பிரதான வீதியில் வெலிசர - மஹபாஹே பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம் பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதோடு, ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சிறிய லொறி ஒன்றின் பின் பகுதியில் கன்டெய்னர் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது 34 வயதான பெண் ஒருவரும் 36 வயதான ஆண் ஒருவருமே உயிரிழந்தனர்

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ராகம வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மஹபாஹே பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, நானுஓய - ஹோடன்தென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றுமொரு வாகன விபத்தில் ஆறு பெண்கள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர். சுற்றுலா சென்ற பஸ் ஒன்று வீதி யைவிட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்தவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் குளியாபிடிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதோடு நானுஓய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்காட்சி


எடெக்ஸ் மத்திய ஆண்டு கண்காட்சி இம்மாதம் 30, 31ஆம் திகதிகளில் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் (SLECC) நடைபெறவுள்ளது.

மு.ப 10.30 தொடக்கம்- மாலை 7.00 மணிவரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் 115 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. றோயல் கல்லூரி யூனியன் ஏற்பாடு செய்துள்ள இக்கண்காட்சியில் உள்நாட்டு- வெளிநாட்டு உயர்கல்வி நிலையங்கள் காட்சிப்படுத்தப் டுத்தப்படவுள்ளன.


25) SLT என்பதன் அர்த்தம்
1) பத்திரிகை நிறுவனங்கள் 2) நூலகம்
3) ஸ்ரீலங்கா டெலி கொம் 4) இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

26) வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டிய கடிதத்தை இடவேண்டிய தபால் பெட்டியின் நிறம் என்ன?
1) நீலம் 2) சிவப்பு 3) பச்சை 4) வெள்ளை

27. கீழே தரப்பட்ட படங்களுள் எல்லே விளையாட்டின் படம் எது?

(1)

(2)

(3)

(4)


28) தாவரங்களின் தண்டுகள் ஒளியை நோக்கி வளருவதற்குக் காரணம் எது?
1) உறக்க முன்னிலை அசைவு 2) ஒளித்திருப்ப அசைவு
3) தொடுகை முன்னிலை அசைவு 4) இரசனை அசைவு

29) வீட்டு ஈக்கள் மூலம் பரப்பப்படும் நோய் எது?
1) பெரி பெரி 2) மலேரியா 3) கொலரா 4) கழலை நோய்

30) இலங்கையிலுள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களை பதிந்து வைத்து புலமைச் சொத்துரிமையை பாதுகாக்கும் அமைப்பின் குறியீடு
1) ISBN 2) SLA 3) ISO 4) LLO

31) புராதன இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளம் எது?
1) கலாவாவி 2) அபயவாவி 3) திஸாவாவி 4) றம்பொட

32) நிலத்திலும் நீரிலும் இறங்கக்கூடிய விமானம் எவ்வாறு அழைக்கப்படும்?
1) எயார்பஸ் 2) ஜெட்விமானம் 3) சீபிளேன் 4) யுத்த விமானம்

33) இலங்கையில் உள்ள மிக அழகான நீர்வீழ்ச்சி எது?
1) துன்கிந்த 2) பம்பரகந்த 3) விக்டோரியா 4) றம்பொட

34) விவசாயிகளுக்கு உதவும் பிராணி எது?
1) நுளம்பு 2) மண்புழு 3) நத்தை 4) அணில்

35) நெல் அறுவடையுடன் தொடர்புடைய கிராமிய சொல் எது / எவை?
1) அரிவிவெட்டல் 2) பொலி தூற்றதல்
3) குஞ்சுவாயன் 4) மேற்கூறியயாவும்

36) மரத்தில் இறுக்கமாக அறையப்பட்டுள்ள ஆணியைப் பிடுங்குவதற்கு பொருத்தமான உபகரணம் எது?
1) புரிசாவி 2) ஆணி பிடுங்கி 3) திருகுயக்கு 4) திருகாணி

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



**தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2014**

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



01) பின்வரும் நிகழ்ச்சி நிரலை வாசித்து அதன் கீழ் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**பாடசாலைப் பரிசளிப்பு விழா - 2012**

இடம் : பிரதான மண்டபம்
திகதி : 30- 05- 2012
நேரம் : பி.ப 2.00 - பி.ப 6.30
1- இறை வணக்கம்
2- மங்கள விளக்கேற்றல்
3- வரவேற்புரை - துணையதிபர்
4- தலைமையுரை - அதிபர்
5- முதன்மை விருந்தினர் உரை
6- பரிசில்கள் வழங்குதல்
7- கலை நிகழ்ச்சிகள் - சின்னஞ் சிறிய மாணவர்கள்
8- நன்றியுரை
9- தேசிய கீதம்

1) "பரிசளிப்பு" என்பதனைப் பிரித்து எழுதுக? ------------------------
2) பரிசளிப்பு விழா நடைபெறுவதற்கு எடுத்த நேரம் எவ்வளவு? ------------------------
3) இங்கு வந்துள்ள அடுக்கிடுக்குத் தொடரை எழுதுக. ------------------------
4) நிரலில் உள்ள பெயர் அடைமொழி ஒன்று தருக ------------------------
5) இந்நிகழ்ச்சியில் வரவேற்புரையை வழங்கியவர் யார்? ------------------------
6) இங்குள்ள பொதுப்பாற் சொற்களுள் ஒன்றை எழுதுக? ------------------------

02) பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.
1) அத்தி பூத்தாற் போல ------------------------
2) வேலியே பயிரை மேய்ந்தது ------------------------

03) பின்வரும் தொடர் மொழிக்கு ஒரு மொழி எழுதுக.
1) அரசன் முறை கேடாக ஆளும் ஆட்சி ------------------------
2) உணவாகப் பயன்படும் உமி நீக்கப்பட்ட நெல் ------------------------
3) இனிப்பு, புளிப்பு , உவர்ப்பு , துவர்ப்பு, உறைப்பு , கசப்பு ஆகியன ------

04) அடைப்பில் உள்ள சரியான விடையைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.
1) வேடன் வில்லை வளைத்துப் ------------------------ தொடுத்தான்.
(பானம் / பாணம்)
2) சதங்கையின் ------------------------ கணீர் கணீர் என்று கேட்டது.
(ஒழி, ஒலி, ஒளி)

05) சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்க

திருத்துவது / காரியம் / சிறுவயதில் / இயலாத / திருந்தாத / பிள்ளையைத்

..............................................................................

06) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1) நீ அதைப் பார்த்தாயா என்று கேட்டான்

2) கொழும்பு மட்டக்களப்பு கண்டி காலி ஆகிய இடங்களில் கண்காட்சி நடைபெறும்

07) பின்வரும் வசனங்களில் காணப்படும் பிழையை திருத்தி சரியான வசனத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) நான் கடைக்குச் சென்று இளனி வாங்கி அருந்தினேன்

..............................................................................

2) பரீட்சையில் சித்திஅடைந்ததால் ராணி பல்களைக்கழகம் சென்றாள்

..............................................................................

08) கீழே உள்ள மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.

1) உப்பில்லாப் பேச்சு ..............................

2) கதை கட்டுதல் ..............................

09) பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1) ஜுன் .................... 2) ஆகஸ்ட் ....................

3) டிசம்பர் ....................

10) கருத்தை தமிழில் எழுதுக.

1) Please Clean the Classroom

..............................................................................

2) Wash your hands

..............................................................................

11) சிங்களச் சொற்களுக்கும், வசனத்துக்கும் உரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

1) கெசெல் ..............................

2) நீல் பாட்ட ..............................

3) குருதுமி உகன்வனவா ..............................

12. அரச விளம்பரப் பலகையில் இவ்வாறான மலர் இருப்பதை அவதானித்திருப்பீர் அதன் அர்த்தம்



1) வளமான நீதிர்காலம் 2) உலக நிலைப்பாடு
3) தர்மமும் நீதியும் 4) சமாதானம்



13) இலங்கைப் பணத்தை அச்சிட்டு வெளியிடும் வங்கி எது?
1) மக்கள் வங்கி 2) மத்திய வங்கி
3) இலங்கை வங்கி 4) கொமஷியல் வங்கி

14) 

அருகில் உள்ளபடத்தின் அர்த்தம்
1) இங்கே குப்பை போடவும்
2) இங்கே குப்பை போடவேண்டாம்
3) குப்பை போட்டால் தண்டனை
4) சுத்தத்தைப் பேணவும்

15) பின்வரும் பூக்களில் இரவில் மலரும் பூ
1) செம்பருத்தி 2) தாமரை 3) நந்தியாவட்டை 4) இருவாட்சி

16) மருந்தாகப் பயன்படும் இலைகளில் ஒன்று
1) கற்பூரவள்ளி 2) மாவிலை 3) நொச்சி 4) பாகை

17) எமது நாட்டின் தேசியப்பறவை
1) காணாங்கோழி 2) வெண் புறா 3) காட்டுச்சேவல் 4) இருவாட்சி


18) மீன்டின் ஒன்றைத் திறக்க மிகப் பொருத்தமான உபகரணம்
1) டின் கட்டர் 2) மூடி திறப்பான் 3) பாக்குவெட்டி 4) வாள்

19) பாது காப்புக்காக பயன்படுத்தும் உபகரணமாக அமையாதது
1) தலைக்கவசம் 2) கையுறை 3) சப்பாத்து 4) சீருடை

20) பேருந்தில் கண்டிப்பாக பயணிக்கக்கூடாத பகுதி
1) ஆசனம் 2) மிதிபலகை
3) பின்பக்க ஆசனம் 4) சாரதிக்கு முன்னால் உள்ள ஆசனம்

21. முன்னால் வலப்பக்கம் திரும்பவும் என்பதை வெளிப்படுத்தும் வீதிக்குறியீடு எது?

1) 2) 3) 4)



22) வேலைகளை இலகுவாக்க பாடப்படும் பாடல் வகைகளுள் அடங்குவது
1) தாலாட்டுப்பாடல் 2) தொழிற்பாடல்
3) ஒப்பாரிப்பாடல் 4) கும்மிப்பாடல்

23) பின்வரும் விவசாய உபகரணங்களில் ஏர் எது?

1)



24) ஊசித் துளைக் கமராவினூடாக பொருளொன்றைப் பார்க்கும் போது தோன்றும் விதம்
1) நேராக 2) பெரிதாக
3) தலைகீழாக 4) சாய்வாக





நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் இந்தியத் துணை தூதரகமும் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் லாவண்யா ஆனந்தின் தெய்வீக சுகானுபவம் II பரத நாட்டிய நிகழ்வை நடாத்தின. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி நாட்டிய மங்கை லாவண்யாவுக்கு விரது வழங்குவதையும் நடன நிகழ்வையும் காணலாம். (படங்கள்-நந்தகுமார்)

# வாசிப்பை தூண்டும் வகையான நூல்கள் எப்போதும் வெளிவர வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

'வன்னியின் வரலாறும் பண பாடும்' என்ற நூல் அதன் பதிப்பாசிரியர் க.சுந்தரலிங்கத்தின் மிகப்பெரும் முயற்சி. அவரது நூல் போன்று மேலும் பல நூல்கள் இங்கு வெளிவரவேண்டும் [illegible]று யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை மண்டபத்தில் நடைபெற்ற 'வன்னியின் வரலாறும் பண்பாடும்' என்ற நூலின் அறிமுக நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே துணைவேந்தர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் இ.அருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பல பேராசிரியர்கள் ஆக்கிய ஆக்கங்கள் உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. அவற்றினைப் பார்க்கும் போது எவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் ஆக்கங்களினை பெற்று இந்த நூலை பதிப்பாசிரியர் உருவாக்கியிருப்பார் எண்ணத் தோன்றுகிறது. வன்னி என்றால் என்ன என்பதற்கு இந்த நூல் தருகின்ற விளக்கம் மிகவும் தத்துருவமானதாகவுள்ளது. நூலாசிரியர் சுந்தரலிங்கத்திடம் நான் கூறியிருக்கின்றேன். இப் படிப்பட்ட நூல்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று. மிகச்சிறந்த முயற்சி அவரது இந்த நூல் இத்தகைய முயற்சியை யாழ். பல்கலைக் கழகத்தில் இருப்பவர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்த துணைவேந்தர் வாசிப்பதற்கு தூண்டும் விதத்தில் இந்த நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நூல் ஏற்கனவே கொழும்பில் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் மாங்குளத்தில் இந்த நூலின் அறிமுக நிகழ்வு ஒன்று முன்னதாகவே நடைபெற்றிருந்தது. பதிப்பாசிரியர் க.சுந்தரலிங்கம் தனது சொந்த நிதியில் இந்த நூலை. பதிப்புச் செய்து வெளியிட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பதிப்பாசிரியர் க.சுந்தரலிங்கத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். நூலின் முதலாவது சிறப்பு பிரதியை யாழ்பல் கலைக கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் குழந்தை மா.சண்முகலிங்கத்திற்கு யாழ். பல் கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரடணம் வழங்கி வைத்தார். தொடர்ந்து அதிதிகளால் நூலின் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. (பா)

# சிம்மாசனங்களில் குற்றவாளிகள் தெரு வெளிநாடகம் யாழில்



வட மாகாண மக்களின் குறிப்பாக இன்றைய இளையோரின் பிரச்சினைகளுக்கு யார் பொறுப்பு? என்கிற வழக்குடன் மக்களின் தீர்ப்புக்காக யாழ்ப்பாணத்தில் கிராமங்கள் தோறும் சிம்மாசனங்களில் குற்றவாளிகள் என்கிற தெருவெளி நாடகம் காண்பிக்கப்பட்டு வருகின்றது .

இந்நாடகத்தை துறை சார்ந்த நிபுணர் எஸ். பாலசிங்கம் எழுதி, இயக்கி உள்ளார். நடிகர்கள் அனைவரும் இளையோர்கள் ஆவர். மக்களின் இன்றைய அவலங்கள் குறிப்பாக இளையோரின் அவஸ்தைகள் தீராப் பிரச்சினைகளாக ஆக்கப்பட்டு இருப்பதை இந்நாடகத்தில் மிக நுட்பமாக காட்டப்படுகின்றது.

வட மாகாண கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் சொலலின் செல்வர் இரா. செல்வவடிவேல், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆகியோருக்கு இந்நாடகம் விசேடமாக போட்டுக் காட்டப்படுவதைக் காணலாம்

# மணவாளக் கோல விழா

(வவுனியா)

வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த மணவாளக் கோல விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷே கிரியைகள் நடைபெற்று பின்னர் முருகப் பெருமான் விநாயகப் பெருமான் வீதி உலா இடம்பெறும்.

தொடர்ந்து பிற்பகல் திருக்கல்யாணம் திருவூஞ்சல் நடைபெற்று எம்பெருமான் எழுந்தருளி உள்வீதி வெளிவீதி உலா வருவதல் இடம்பெறும்.

இவ்விழாக்களை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.பாலச்சந்திரக் குருக்களும் ஆலய குரு சிவஸ்ரீ தி.கிருபானந்தாக் குருக்களும் நடாத்தி வைக்கவுள்ளனர்.

# க.பொ.த. (உ/த) பரீட்சை விடைத்தாள் முதற்கட்ட சரிபார்க்கும் பணிகள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் சரிபார்க்கும் பணிகள் எதிர் வரும் 30 ஆம் திகதி ஆரம்பித்து எதிர்வரும் மாதம் 12 ஆம் திகதி வரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விடைத்தாள் சரிபார்க்கும் பணிகளுக்காக முற்றாக மூடப்படும் 10 பாடசாலைகள் எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், 11 பாடசாலைகளின் சில வகுப்பறைகள் மாத்திரம் விடைத்தாள் திருத்தல் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் நிலையில், அவை எதிர் வரும் 12 ஆம் திகதி திறக்கப்படவுள்ளன.

# நிதி உதவிக்கான கோரிக்கை சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

துணுக்காய் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான உதவிகளை பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிடம் கேட்பதாக துணுக்காய் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் உறுப்பினர் தி.ஜெயராசாவினால வைத்த கோரிக்கை பிரதேச சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி துணுக்காய் பிரதேச சபையில் நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் கீழ் வரும் அபிவிருத்திக்கான உதவியை பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில அபிவிருத்தி அமைச்சிடம் கோருவதாக சபையில் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் திட்டங்கள் வருமாறு,

தீர்மான இல.6 மல்லாவி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் 4 மில்லியன், தீர்மான இல 07 திருநகர் மயானம் புனரமைக்க 02 மில்லியன், தீர்மான இல.08 கோட்டை கட்டிய குளம் அம்பலப் பெருமான் குளம் பழைய முறிகண்டி ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கல், தீர்மான இல. 09 நீர் பௌசர் இயந்திரத்துடன் 01 நீர்தாங்கி 06 மில்லியன், தீர்மான இல 10 துணுக்காய் கிராமத்தையும் திருநகர் பகுதியை இணைக்கும் பாலம் அமைக்க 05 மில்லியன், தீர்மான இல. 11 துணுக்காய் பிரதேச சபை பணியாளர் விடுதி அமைத்தல் 05 மில்லியன் ஆகியவை தீர்மானிக்கப்பட்டவை 21 ஆம் திகதி அன்று துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் வீ.இசாசரெத்தினம் தலைமையில் சபை மண்டபத் தில் மு.ப 10 மணிக்கு நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரதேச சபை செயலாளர் கந்தசாமி சத்தியநாதன் பாரம்பரிய சிறுகைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட இத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு உதவக் கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (140)

# நடைபாதை வடிகாலை மூடுமாறு கோரிக்கை

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள நடைபாதையில் நீர் ஓடும் வடிகால் பகுதி மூடப்படாது இருப்பதால் வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்த வாய்க்காலுக்குள் தடுக்கி விழும் நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இந்த இடத்தில் வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சிறுவர்கள் எனப் பலரும் செல்வதுடன் இரவு நேரங்களில் பயணம் செய்வோர் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவே பொதுமக்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்ட தரப்பினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (66)

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# சுட்டுவீழ்த்தப்பட்டது உளவு விமானம்

# இஸ்ரேலுக்கு ஈரான் பதிலடி

அணு உலை நிலையங்களை உளவு பார்க்க வந்த இஸ்ரேலின் உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக ஈரான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஈரானின் பல பகுதிகளில் அமைந்துள்ள அணு செறிவூட்டும் நிலையங்களை ஆளில்லா உளவு விமானங்களின் மூலமாக இஸ்ரேல் உளவு பார்த்து வருகின்றது.

இந்நிலையில், ஈரானின் நட்டன்ஸ் பகுதியில் உள்ள அணு செறிவூட்டும் நிலையத்தை நேற்று முன்தினம் உளவு பார்த்த இஸ்ரேலின் ஆளில்லா உளவு விமா



னத்தை சுட்டு வீழ்த்தியதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

ஈரானின் நட்டன்ஸ் அணு செறிவூட்டும் நிலையத்தை நோக்கிச் சென்ற ஆளில்லா உளவு விமானத்தை, ஈரான் இராணுவப் படைகள் ஏவுகணை மூலம் தாக்கி அழித்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஈரானிலுள்ள அணு உலைகளில் மின்சார உற்பத்தி மட்டுமின்றி பயங்கரமான பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அணு ஆயுதங்களும் தயாரிக்கப்படுவதாக உலக நாடுகளால் குற்றம் சாட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஈரானின் அணு ஆயுதங்களை எல்லாம் பறிமுதல் செய்து அழித்து விட வேண்டும் என இஸ்ரேல் கங்கணம் கட்டி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## சமூக வலைத்தளங்களை சாதகமாக்கும் தீவிரவாதிகள்

(புதுடில்லி)

"இந்தியன் முஜாஹிதீன்" பயங்கரவாதிகள், "பேஸ்புக், ஜி - மெயில்" போன்ற சமூக தொடர்பு வலைத்தளங்களைப்பயன்படுத்தி, தங்களுக்குள் தகவல் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர் இதற்காக பல இணையத்தள வசதிகளை பயன்படுத்தினர் இதற்காக, பல போலி முகவரிகளை அவர்கள் தெரிவித்னர் என, டில்லி நீதிமன்றில் டில்லி பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையில் தெரிவித்துள்ளனர்.

மேலும், விஷம் தடவிய கடிதங்கள், பார்சல்களை அனுப்பி, அதிகாரிகள் மற்றும் உயர்மட்டத்தில் இருப்பவர்களைக்கொல்லவும் அவர்கள் சதித்திட்டம் தீட்டினர் எனவும், அந்த குற்றப் பத்திரிகையில் அவர்கள் தெரிவித்தனர். இந்தியன் முஜாஹிதீன் பயங்கரவாத அமைப்பின் நிறுவநர்களில் ஒருவரான, ரியாஸ் பட்கலுடன் அந்த அமைப்பினர் இவ்வாறு தான் தொடர்பு கொண்டனர் என, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பயங்கரவாதி பட்கல், இப்போது டில்லி பொலிஸ் பிடியில் உள்ளான்.

உலகச் செய்திகள்

## கலிபோர்னியாவில் நிலநடுக்கம்



(சான் பிரான்சிஸ்கோ)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் வீடுகள் குலுங்கின. மின்தடை காரணமாக 10,000 வீடுகள் இருளில் மூழ்கின.அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள அமெரிக்கன் கன்யான் பகுதியை மையமாகக் கொண்டு நேற்று அதிகாலை பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.20 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் அளவு 6.0 ரிக்டர் என பதிவாகி இருப்பதாக அமெரிக்க வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின.பூமிக்கு கீழே 10.8 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அதிர்ச்சியை சான் பிரான்சிஸ்கோ, டேவிஸ் ஆகிய நகரங்களிலும் மக்கள் உணர்ந்துள்ளனர். டுவிட்டரில் நிலநடுக்கத்தால் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். இந்த நிலநடுக்கத்தால், நாபா நகரத்தில் திடீர் மின்தடை ஏற்பட்டது. 10,000 வீடுகள் இருளில் மூழ்கின.

## தவறான வாக்குறுதிகள் மூலமே மோடி தேர்தலில் வெற்றி பெற்றார்

### திக்விஜய்சிங் தெரிவிப்பு



இந்திய பிரதமர் மோடி தவறான வாக்குறுதிகளை அளித்து பதவிக்கு வந்துவிட்டதாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய்சிங் தெரிவித்துள்ளார்.

ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தெலுங்கானா காங்கிரஸ் ஆலோசனைக்கூட்டத்தில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய்சிங் கலந்து கொண்டுள்ளார்.

அப்போது அவர் பேசுகையில், தேர்தல் பிரசாரத்தில் மோடி, குஜராத் மாதிரியான வளர்ச்சி என்று கூறினார். குஜராத் மாதிரி வளர்ச்சி என்பது என்ன? பொய்யான வாக்குறுதிகளை அளிப்பது, அதனை மக்களிடம் பரப்புவது. நாட்டு மக்களுக்கு தவறான வழிகாட்டுதலை அவர் கொடுத்துள்ளார்.

மோடி குஜராத்தில் 12 வருடங்கள் முதலமைச்சராக இருந்ததால் என்ன நடந்தது, ஏழைகளின் எண்ணிக்கை அங்கு அதிகரித்துள்ளது, மேலும், ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளது. நரேந்திரமோடி பேச்சாற்றலிலும், தவறான வாக்குறுதிகள் அளிப்பதிலும் வல்லவர். மோடி தவறான வாக்குறுதிகளை அளித்து இந்த ஆட்சிக்கு வந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

## இந்திய எல்லைப்பகுதியில் தொடரும் தாக்குதல்

(ஜம்மு)


இந்திய எல்லைப்பகுதியில், பாகிஸ்தான் இராணுவத்தின் அட்டூழியம் நேற்று முன்தினமும் தொடர்ந்தது. எல்லையோர கிராமப் பகுதிகளைக் குறி வைத்து, அவர்கள் நடத்திய தாக்குதலுக்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்தது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே, போர் நிறுத்த ஒப்பந்த விதிமுறை அமுலில் உள்ளது.

ஆனால், பாகிஸ்தான் இராணுவம், இந்த விதிமுறைகளை மதிக்காமல், தொடர்ந்து, அத்துமீறி தாக்குதல் நடாத்தி வருகிறது. கடந்த இரண்டு வாரங்களாக, இடைவிடாமல், இந்திய எல்லை பகுதிக்குள் பாக். இராணுவம் தாக்குதல் நடாத்தி வருகிறது. கடந்த சனிக்கிழமை நடாத்திய தாக்குதலில், எல்லையோர கிராமத்தில் வசிக்கும் அப்பாவி மக்கள் இருவர் கொல்லப்பட்டனர். இதற்கு இந்திய இராணுவம் பதிலடி கொடுத்துவருகிறது.

குறிப்பாக, இந்திய எல்லையில் உள்ள, 19 கிராமங்கள், அவர்களின் தாக்குதலுக்கு இலக்காகின.இராணுவ அமைச்சர் அருண் ஜெட்லி கூறுகையில், "பாகிஸ்தான் படையினர், எல்லை பகுதியில் தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு நம் எல்லைப்பாதுகாப்பு படையினரும், இராணுவத்தினரும் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகின்றனர். நம் எல்லையையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கு தேவையானஅனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும், என்றார்.

## தோடம்பழத்தால் கொலை



தென்னாபிரிக்கா நாட்டில் விவசாயி ஒருவரை இரண்டு நபர்கள் தோடம்பழத்தால் அடித்து கொலை செய்துள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவின் லிம்பா மாகாணத்தில்(Limba) 38 வயது விவசாயி ஒருவருடன், இரண்டு நபர்கள் பெரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். சண்டை பெரிதும் முற்றியதால் இந்த இரண்டு நபர்களும் பக்கத்தில் உள்ள தோடை மரத்தில் இருந்து பழங்களை பறித்து சரமாரியாக அவர் மீது வீசியுள்ளனர்.

இதனை அடுத்து விவசாயி சம்பவ இடத்தில் உயிரிழந்தார். இந்நிலையில் பொலிஸார் இரு நபர்களையும்கைது செய்து விசாரித்து வருகின்றனர். விவசாயியின் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## ஐஸ்கிறீமை உருகாமல் தடுக்கும் வெண்டைக்காய்



(சிகாகோ)

ஐஸ்கிறீம் நீண்ட நேரம் உருகாமல் இருப்பதற்கு, வெண்டைக்காய் உதவுகிறது என்பதை, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.


அமெரிக்காவில் உள்ள, உணவு தொழில்நுட்ப நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஐஸ்கிறீமின் தரம், அதில் உள்ள பனித்துகள்களால் நிர்ணயிக்கப்படுகிறது. குளிரூட்டியில் சேமித்து வைக்கும் ஐஸ்கிறீம் உருகாமல் இருப்பதற்கு, "ஸ்டெபிலைசர்" உதவுவது போல, வெண்டைக்காய் கூழில் உள்ள நார்ச்சத்தும், தண்ணீரும் இணைந்து, ஐஸ்கிறீம் உருகாமல் தடுக்கிறது. இதன் காரணமாக, ஐஸ்கிறீமை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு உருகாமல் கொண்டு செல்ல முடிகிறது. இவ்வாறு, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஒலியைவிட அதிவேகமான நீர்மூழ்கி கப்பல் தயாரிப்பு

(பெய்ஜிங்)

சீனா அனைத்து துறைகளிலும் அதிவேகமாக முன்னேறி வருகிறது. இதுஉலகிலேயே மிக அதிவேகமாக பாய்ந்து செல்லும் புல்லட் ரயில்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளது. விண்வெளி துறையில் ஆய்வு மேற்கொண்டு முன்னேறி வருகிறது.

இந்த நிலையில் தற்போது ஒலியை விட மிக அதிவேகமாக



பயணம் செய்யக்கூடிய 'சூப்பர் சோனிக்' நீர்மூழ்கி கப்பலைத் தயாரிக்கிறது.

இக்கப்பலை சீனாவின் ஹார்பின் இண்சிடியூட் ஆப் டெக்னாலஜியின் நிபுணர்கள் வடிவமைத்து தயாரிக்கின்றனர். இதில் புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த நீர் மூழ்கி கப்பல் சீனாவில ஹாங்காய் நகரத்தில் இருந்து அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவுக்கு 2 மணி நேரத்தில் பயணம் செய்ய முடியும். சான் பிரான்சிஸ்கோ அமெரிக்காவின் மேற்கு பகுதியிலும், ஹாங்காய் சீனாவின் கிழக்கு பகுதியிலும் உள்ளன.

அவற்றின் இடையேயான தூரம் 9,873 கி.மீற்றர். சீனாவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையே பகைமை நிலையுடன் கூடிய பனிபோர் இருந்துவந்த போது சோவியத்ரஷியா, 'சூப்பர் கேவியசன்' என்ற அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலை தயாரித்தது.

# காணிப்பயன்பாட்டுக்கு புதிய சட்டம் தவறான அணுகுமுறைக்கு கண்டனம்

## கூட்டமைப்பு மீது குவியும் குற்றச்சாட்டுக்கள்

குடியேற்றத் திட்டக்காணிகள் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகிறது என கிளிநொச்சி கண்டாவளை உழவனூர் கிராம மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, உழவனூர் கிராம மக்களாகிய நாங்கள் கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றோம். நாங்கள் ஆரம்பத்தில் இந்தக் காணிகளில் குடியிருக்க வந்த போது வெறும் காடுகளாகவே இந்தக் காணிகள் காணப்பட்டன. அதனைத் துப்புரவு செய்து கிணறு வெட்டி பலன்தரும் மரங்களை வைத்து பெறுமதியான காணிகளாக மாற்றி வாழ்ந்து வருகின்றோம்.

இந்த நிலையில் அண்மையில் அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள காணி தொடர்பான சட்டம் முப்பது வருடங்களுக்கு முன் காணிகள் எவருக்கு வழங்கப்பட்டதோ அவர்கள் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்கிறது. தங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளே தெரியாத அந்த மக்கள் வெளிநாடுகளிலிருந்தோ அல்லது நாட்டின் ஏனையபாகங்களில் இருந்தோ வருகை தந்து இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி காணிகளை பெற்றுக் கொள்ள முடியும் என்றால் கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக இந்த காணிகளில் வாழ்ந்து வருகின்ற எங்களின் நிலை என்னவாகும் என கேள்வியெழுப்பும் உழவனூர் மக்கள்,

காணிகளை இழந்த மக்கள் காணிகளை மீண்டும் பெற முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியும், நாடாளுமன்றத்தில் சட்டத்திற்கு ஆதரவாக பேசியதும் எமக்கு பெரும் ஏமாற்றத்தினையும், கவலையினையும் அளிப்பதோடு காணிகளை இழந்த மக்கள் என்பது அரசினால் அன்று வழங்கப்பட்ட காடுகளாக இருந்த காணிகளை விட்டுச்சென்று வெளிநாடுகளிலும், மற்றும் ஏனைய இடங்களிலும் வசதி வாய்ப்புகளோடு வாழ்கின்றவர்கள் எனவும், அவர்களுக்கு ஆதரவாகப் பேசுகின்றவர்கள் இந்தக் காணிகளில் முப்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்ற இந்த மண்ணில் எல்லா துன்ப துயரங்களை அனுபவித்த எங்கள் தொடர்பில் ஏன் அக்கறை கொள்ளவில்லை?

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக பேசுகின்ற அதேவேளை மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் எங்கள் மத்தியில் வந்து இந்த காணிகளில் குடியிருக்கும் மக்களுக்கே இந்தக் காணிகள். அதனை எவரும் மீண்டும் பெற்றுக்கொள்ள அனுமதிக்க முடியாது என கூறுகின்றார் இது எமக்கு வேடிக்கையாக இருப்பதோடு இவர்களின் இரட்டை வேடத்தினை எம்மால் அறிய முடிகிறது எனவும் குற்றம் சாட்டும் உழவனூர் மக்கள் தங்களை வைத்து அரசியல் நடத்துவதனை விட்டு தங்கள் கிராமத்தில் வாழ்கின்றவர்கள் போன்று கண்டாவளை பிரதேசத்தில் மத்தியவகுப்புத் திட்டம், படித்த வாலிபர் திட்டம், மகளிர் அபிவிருத்தி திட்டம் போன்ற திட்டக்காணிகளில் வாழ்ந்து வரும் ஏழை மக்களின் நலன்களில் அக்கறையோடு செயற்படுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். (25, 29)

# தலைநகரில் கைப்பணிக் கண்காட்சி



(கொழும்பு)

கைவினை கைப்பணித்துறையினை வளர்த்தெடுத்து அதனூடாக துறைசார்ந்தோரது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 'சில்ப - 2014' தேசிய கைவினை கைப்பணி கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 27 வருடங்களாக இக்கண்காட்சி நடைபெற்று வருகின்றது.

இதில் கைவினை கைப்பணி துறைசார்ந்தோரால் வடிவமைக்கப்பட்டு மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

இதன்மூலம் இவ்வாறான உற்பத்திகளை மேம்படுத்துவது மட்டுமன்றி அதனூடாக குறித்த உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் அதேவேளை துறை சார்ந்தோரை ஊக்குவிப்பதுமே எமது நோக்காகும்.

இதற்கமைவாகவே தேசிய கைவினை கைப்பணிக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் 'சில்ப - 2014' தேசிய அருங்கலைகள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, இதற்கு தேசிய வடிவமைப்பு நிலையம், பனை அபிவிருத்தி சபை, கித்துள் அபிவிருத்தித் திட்டம் ஆகியன இணை அனுசரணை வழங்கும் நிலையில் அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இவ் ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் உரையாற்றும்போது முழு நாட்டையும் விசாலித்து நிற்கக் கூடிய வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது அமைச்சு செயற்பட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி நாட்டினது கைத்தொழில் துறைகளை விரிவாக்கி உற்பத்தியாளர்கள் சிறந்த வருவாயை பெற்றுக் கொள்ளும் வகையில் நவீன தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தி அவற்றையும் அமைச்சர் நடை முறைப்படுத்தியும் வருகின்றார்.

அதுமட்டுமன்றி சகல விதமான சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக நாட்டில் முன்னேற்றம் கண்டுள்ள அதேவேளை எதிர்காலத்திலும் முன்னேற்றம் காணவேண்டுமென்றும் தெரி வித்தார்.

இம்மாதம் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை 'சில்ப - 2014' தேசிய கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சிக்கூடத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கண்காட்சியில் ஆபரணம், உணவு, மரம், மட்பாண்டம், துணி, தோல், இறப்பர், உலோகம், வாத்தியக்கருவிகள், தும்பு, பனை, மற்றும் புல் உள்ளிட்ட பல்வேறு வகையிலான மூலப்பொருட்களிலான உற்பத்திகள் காட்சிக்கூடங்களில் காட்சிப்படுத்தப்பட உள்ள அதேவேளை விற்பனைக்கும் வைக்கப்பட உள்ளன.

# துன்னாலையில் ஒருவர் கைது

துன்னாலைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய 47 வயது சந்தேகநபர் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்ததாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். துன்னாலைப் பகுதியில் வீதி ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே அவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், அந்நபரிடமிருந்து குறடு, சுத்தியல் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி நபரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர், கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## தலைநகரில்....

தொகுதிக்கான பிரதான வாயில் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

அதனையடுத்து வர்த்தகத் தொகுதியினை அதிதிகள் பார்வையிட்டதுடன் மங்கள விளக்கேற்றி வைக்கப்பட்டதுடன் பெயர்ப்பலகையும், நினைவுக்கல்லும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அத்துடன், வர்த்தக நடவடிக் கைகளையும் அதிதிகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்த அதேவேளை, வர்த் தகர்களுக்கான உரிமைப்பத் திரங்களையும் வழங்கி வைத்தனர்.

நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்ட வர்த்தகத் தொகுதி 94 கடைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவற்றில் மரக்கறி, உணவு, உள்ளிட்ட ஏனைய அத்தியா வசியப் பொருட்களை பொது மக்கள் இலகுவாக கொள்வனவு செய்ய முடியும்.

மகிந்த சிந்தனைக்கு அமைவாக ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாகக் கட்டியெழுப்பும் நோக்கில் இந்த அபிவிருத்தி செயற்திட்டம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ஷவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக இவ் வர்த்தக சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவும், கௌரவ விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சிரேஷ்ட அமைச்சர் பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர்களான அஸ்வர், துமிந்தசில்வா, கொழும்பு மாநகர முதல்வர் முஸாம்மில் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## பொலிஸ்....

இலங்கையுடன் பேச்சு நடத்தலாம் ஆலோசனை வழங்கலாம் ஆனால் அந்த நாடு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தியா உத்தரவிட முடியாது. இரு நாடுகளும் பரஸ்பரம் மற்றையவர்களின் இறைமையை மதித்துச் செயற்பட வேண்டும்.

இந்தியப் பிரிவினைவாதிகளுடன் இலங்கை பேச்சு நடத்தினால் இந்தியாவின் உணர்வுகள் எவ்வாறிருக்கும்? நாங்கள் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றக்கூடாது. அதாவது பெரியண்ணன் மாதிரி செயற்பட்டு அழுத்தங்களைக் கொடுக்கக் கூடாது.

எமது நிலைப்பாட்டையே வலியுறுத்த வேண்டும். இலங்கையில் 13 ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைப் பாராட்டவேண்டும்.

தமிழர்கள் தாங்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதை மறந்து, தம்மை இலங்கையர்களாகக் கருதி அந்த நாட்டின் அரசமைப்பு, சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும், அவர்கள் வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரத்தை கோரக் கூடாது என்றுள்ளார்.

## சாட்சிகளை...

லுக்கு வரவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தெரிவித்தார்.

உலக கரிசனை நிறுவனத் தினால் வெளியிடப்பட்ட 'சிறகுகள்' நூல் வெளியீட்டு விழாவின் முல்லை மாவட்ட அரச அதிபருடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவும், கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் சிறுவர் தொடர்பான பிரத்தியோக நீதிமன்றங்கள் வடமேல் மாகணத்தில் நிறுவப் பட்டுள்ளதாகவும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டமூலம் நீதிமன்றங்களில் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கு குறிப்பாக சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு இச்சட்டமூலம் மிகவும் உதவும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் இலத்திரனியல் நடை முறைமூலம் தூரப்பிரதேசங்களிலிருந்து சாட்சிகளை வழங்கும் நடைமுறையும் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் கடும் முயற்சியினால் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரின் முயற்சியால் 23 மில்லியன் ரூபா செலவில் சிறுவர் பாதுகாப்பு இல்லம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை முல்லை மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (170)

## மேற்குலக...

வித்துள்ளார்.

இலங்கையின் உள்விவகாரப் பிரச்சினைகளில் வேறு தரப்பினர் தலையீடு செய்வதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்குலக நாடுகளின் இது போன்ற நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க மனித உரிமை விவகாரங்களை இந்தத் தரப்பினர் ஆயுதமாக பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் இலங்கை பேணி வரும் உறவுகள் தொடர்பில் எவ்வித முரண்பாடும் இதுவரை கிடையாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சாத்தியமில்லை...

மொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் ஐரோப்பாவில் முழு அளவில் இயங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இலங்கையில் மீள ஒருங்கிணைந்தால் அது யாழ்ப்பாண மக்களுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க இடமளிக்க முடி யாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கக்கூடிய சாத்தியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கைத்தொழில் துறையை பலப்படுத்தல் அடுத்த ஆண்டின் உயரிய இலக்கு

## வரவு செலவுத் திட்ட கலந்துரையாடலில் ஆராய்வு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2015 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தரவுடன் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் அடுத்த ஆண்டிற்கான முன்மொழிவுத் திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்தார்.

குறிப்பாக நாடளாவிய ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளை மகிந்த சிந்தனைக்கமைவாக பலப்படுத்துவதிலும், முன்னேற்றுவதிலும் அமைச்சின் பங்களிப்புகளையும் விளக்கினார்.

அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு பேருதவியாக அமைவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதில் அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய அருங்கலைகள் பேரவை, தேசிய வடிவமைப்பு நிலையம், பனை அபிவிருத்திச் சபை, வடகடல் நிறுவனம் ஆகியவற்றின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பாக துறை சார்ந்தோர் விளக்கமளித்தனர்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பாகவும் அமைச்சினால் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்றிட்டங்களை வலுப்படுத்துவது தொடர்பான தெளிவுரையினை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தர நிகழ்த்தினார்.

இதன்போது அமைச்சரின் ஆலோசகர் திருமதி வீ.ஜெகராஜசிங்கம், அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி மங்கலக்கா மற்றும் அமைச்சின் கீழான நிறுவனங்களது தலைவர்கள், முகாமையாளர்கள் ஆகியோருடன் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் உத்தியோகத்தர்களும் உடனிருந்தனர்.

# அநாமதேய சுவரொட்டிக்கு நீண்ட மறுப்பு அறிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் ஒரு சில இடங்களில் ஒட்டப்பட்டிருந்த அநாமதேய சுவரொட்டி தொடர்பாக நீண்ட மறுப்பு அறிக்கை ஒன்றை கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினரான விந்தன் கனகரட்ணம் விடுத்துள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

என் மீது சேறு பூசும் விதமாக விசமப்பிரசாரத்தினை மேற்கொண்டு, எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாகவும் அடிப்படையற்ற உண்மைக்கு புறம்பான சில குற்றச்சாட்டுகளைச் சுமத்தி யாழ். நகரப்பகுதியில் சுவரொட்டிகளையும், தீவுப்பகுதியில் துண்டுப்பிரசுரங்களை வீசிச் சென்றதாகவும் அறிகின்றேன். இது முற்றிலும் தவறானது என்று அந்த அறிக்கை நீண்டு செல்கிறது.

ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக எனக்கூறி புலம்பெயர் மக்களிடமோ அல்லது அங்குள்ள அமைப்புக்களிடமோ முப்பத்தி ஐந்து சதத்தையேனும் நான் வாங்கவில்லை என உள்ளூர் மற்றும் புலம்பெயர்வாழ் தமிழ் உறவுகளுக்கு விநய மாக தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சந்நிதியானுக்கு நேற்றிரவு 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகியது. (படம் - விசிந்தன்)

# சமகால நிலைவரம் அமெரிக்காவில் பரப்புரை

## மத்திய வங்கி அறிக்கை

அமெரிக்காவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றம் சாட்டியுள்ள இலங்கை மத்திய வங்கி, இதனை எதிர்கொள்வதற்கு இலங்கை நிலைவரம் குறித்த சரியான தகவல்களை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் நன்மதிப்பை அதிகரிக்க அமெரிக்க நிறுவனங்களுக்குப் பெருமளவு பணத்தைச் செலவழித்து, பிரசாரம் செய்வதற்காக மத்திய வங்கி அந்த நாட்டின் பிரசார நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

அமெரிக்க தலைவர்களுக்கும், முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள், இலங்கை குறித்து ஆர்வம் கொண்டுள்ள அனைவருக்கும் இலங்கையின் அரசியல் பொருளாதார நிலைமைகள் குறித்து துல்லியமான தகவல்களை வழங்குவதற்கான பிரசாரமொன்றை ஆரம்பிக்க வங்கியின் நாணயச் சபை தீர்மானித்தது.

அத்துடன் அமெரிக்காவிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் மேற்கொண்டுள்ள தீவிர பிரசாரத்தை எதிர்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவவும் மத்திய வங்கி தீர்மானித்தது.

உலகநாடுகளும் வேறு பல சர்வதேச அமைப்புகளும் அமெரிக்காவில் இவ்வாறான பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இலங்கையில் யுத்தம் முடிவுகுக் கொண்டுவரப்பட்ட பின்னர் பெருமளவு வெளிநாட்டு மூலதனம் இலங்கைக்குள் வந்துள்ளது. எனினும் புலம்பெயர்ந்த தமிழர்களும் ஊடகத் தரப்பினரும் இதனை ஏற்றுக்கொள்ளாது எதிரான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக 2009 மே மாதத்திற்கு பின்னர் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் சிலவும், உள்ளூர், வெளிநாட்டு ஊடகங்களும் இலங்கையின் நலன்களுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய பிழையான தகவல்களைப் பரப்பி வருகின்றன.

இதனை கட்டுப்படுத்தா விட்டால் நாட்டின் கௌரவத்துக்கும், பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்றுள்ளது.

### குளவி கொட்டியதில் 12 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி, புறாப்பொறுக்கி என்ற இடத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில் 12 பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புளியமரத்தில் இருந்து குளவிக்கூடொன்றுக்கு சிறுவர்கள் கல்லெறிந்தமையால், கலைந்த குளவிகள் வீதியில் சென்றவர்களைத் கொட்டியுள்ளது.

# பிரதேச சபைக்கு எதிராக போராட்டம்; பருத்தித்துறையில் திரண்டனர் மக்கள்



பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொற்பதி வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையை கண்டித்து பிரதேச சபைக்கு எதிராக அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டுள்ளனர்.

காலை 11.00 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டம் பருத்தித்துறை வீதியூடாக பருத்தித்துறை பிரதேச சபையைச் சென்றடைந்தது.

பிரதேச சபையை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக் காரர்களை வெளியேறுமாறு பருத்தித்துறை பொலிஸார் தடுத்து நிறுத்தியதுடன் 5 பேர் உள்ளே செல்ல முடியும் எனத் தெரிவித்தனர். இதனையடுத்து 5 பேர் உள்ளே சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 'பொற்பதி வீதியை புனரமைத்து தா', 'எங்கட ஊருக்கு பேருந்தை இடை நிறுத்துவதா?', 'மாணவர்கள் உரிய நேரத்தில் கல்வி கற்க தடையா', சஞ்சீவன் அடுத்த தேர்தலுக்கு வரவேண்டாம்' போன்ற பதாதைகளைத் தாங்கியவாறு சென்றனர்.

அரை மணித்தியாலத்திற்கு பின்னர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்களில் ஐவர் அழைக்கப்பட்டனர். அங்கு தவிசாளருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன், இவ்வீதியை விரைவாக புனரமைத்து தருவதாக அவர்களிடம் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த ஐவரும் மாணவர்களின் நலன் கருதி வீதியை புனரமைத்து பேருந்து சேவையை ஏற்படுத்துமாறு கோரிக்கை மனுவை கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18,116)

# ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளர் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கல்வியியலாளர் பதவிகளுக்கு அவசரமாக ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

இப்பதவிகளுக்கு வடக்கு மாகாண பாடசாலைகளில் உள்ள பொருத்தமான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் பின்வரும் விடயங்களில் முக்கிய் கவனத்தினைக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இந்நியமனம் ஆசிரிய சேவையில் இருந்தவாறே கலாசாலையில் விரிவுரைப் பணியில் ஈடுபடுகின்ற வகையில் அமையும் தற்காலிக இணைப்பாகும்.

விண்ணப்பங்களில் பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் 'விடுவிக்கமுடியும்' எனக் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்களை 12.09.2014 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் அதிபர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை - வகுப்பு III சேவைத் தெரிவுக்காக 23.11.2012 ஆம் திகதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகைமைக்கு அமைவானவர்கள் அல்லது அதற்கு அண்மித்த தகைமை கொண்டவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள்.

இருப்பினும் விண்ணப்பதாரிகளின் கற்பித்த சேவைக்காலத்தை உச்ச அடிப்படையாகக் கொண்டு வயதெல்லை வரையறை செய்யப்படமாட்டாது.

வர்த்தமானி அறிவித்தல் விபரங்கள் தேவைப்படுவோர் இக் கலாசாலையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.